தொகுதி 7, பதிப்பு 08

அக்டோபர் 16–31, 2026


இலவச விநியோகத்திற்கு

நியூ இந்தியா சமாச்சார்

Follow Us @NISPIBIndia









தேசிய ஒற்றுமை தினச் சிறப்புப் பதிப்பு

‘ஒற்றுமையான இந்தியாவின்’ வலிமை

‘உன்னத பாரதத்திற்கான’ உறுதிப்பாடு

சர்தார் வல்லபாய் படேலின் 150–வது பிறந்த நாள் கொண்டாட்டங்களின் இறுதி ஆண்டு தொடங்கும் வேளையில், 'ஒரே பாரதம் – உன்னத பாரதம்' என்ற உன்னத நோக்கம் வெறும் கலாச்சார பிணைப்புகளை வளர்ப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதையும் தாண்டி, அது இந்தியாவின் ஒட்டுமொத்த கொள்கை பார்வையின் ஒரு முக்கிய அங்கமாகவே இப்போது மாறியிருக்கிறது. கடந்த 11 ஆண்டுகளில், ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு திட்டங்களும் அமைப்புகளும் மக்களின் வாழ்க்கையை மிகவும் எளிமையாக்கியுள்ளன; குடிமக்களுக்குப் புதிய ஆற்றலை வழங்கியுள்ளன; அத்துடன் ஒட்டுமொத்த இந்தியர்களின் அடையாளத்தையும் மேலும் வலுப்படுத்தியுள்ளன.





பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் 'பூஜ்ஜிய சகிப்புத்தன்மை' கொள்கை

'மனதின் குரல்' நிகழ்ச்சி நாட்டு மக்களின் நேர்மறையான முயற்சிகளை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது மட்டுமன்றி, நாட்டின் சாதனைகளையும் எடுத்துரைக்கிறது. இந்த சாதனைகள் இந்த தளத்தில் விவாதிக்கப்படும் போது, நாடு முழுவதும் உள்ள மக்கள் அதன் மூலம் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். செப்டம்பர் 27 அன்று ஒலிபரப்பான மனதின் குரல் நிகழ்ச்சியின் 138-வது பகுதியில், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் துல்லியத் தாக்குதல், டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பு, இந்திய கலாச்சாரம், பண்டைய கோயில்கள், தூய்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போதைப்பொருள் எதிர்ப்பு பிரச்சாரம், விளையாட்டு, ஒரு மாவட்டத்திற்கு ஒரு தயாரிப்பு திட்டம் மற்றும் ஊட்டச்சத்து போன்ற முக்கியமான அம்சங்கள் குறித்து விவாதித்தார். இந்த நிகழ்ச்சியிலிருந்து தொகுக்கப்பட்ட பகுதிகள் இங்கே வழங்கப்பட்டுள்ளன...

- **துல்லியத் தாக்குதல்:** 10 ஆண்டுகளுக்கு முன்பு, 2016 செப்டம்பர் 28-29 ஆகிய தேதிகளில், இந்திய ராணுவம் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது மின்னல் வேகத் தாக்குதலை நடத்தியது. பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக நமது துணிச்சலான வீரர்கள் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தாண்டிச் சென்ற விதத்தைக் கண்டு உலகமே வியந்தது.

- **தகுந்த பதிலடி:** கடந்த பத்தாண்டுகளில், பாலகோட் வான்வழித் தாக்குதல் முதல் 'ஆபரேஷன் சிந்தூர்' வரை, இந்தியா ஒரு தெளிவான செய்தியை மீண்டும் மீண்டும் உலகிற்கு கூறுகிறது: இந்தியாவிற்கு எதிராகப் பயங்கரவாதிகள் செய்யும் எந்தவொரு ஆக்கிரமிப்புச் செயலுக்கும் தகுந்த பதிலடி கொடுக்கப்படும்.

- **'பூஜ்ஜிய சகிப்புத்தன்மை' கொள்கை:** நவீன இந்தியா பயங்கரவாதத்திற்கு எதிராகப் 'பூஜ்ஜிய சகிப்புத்தன்மை' கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது; மேலும் இந்த அணுகுமுறையின் முடிவுகளை நாம் இப்போது நேரில் கண்டு வருகிறோம்.

- **ராம ஜென்மபூமி இயக்கம்:** விஸ்வ இந்து பரிஷத்தின் முன்னாள் சர்வதேச செயல் தலைவரான, மறைந்த மதிப்பிற்குரிய அசோக் சிங்கால் அவர்களால் ராம ஜென்மபூமி இயக்கத்திற்கு அளிக்கப்பட்ட வழிகாட்டுதலும் ஆற்றலும் தான், இன்று அயோத்தியில் நாம் காணும் பிரமாண்டமான கோவிலாக உருவெடுத்துள்ளது.

- **முதலாவது சூரியசக்தி கிராமம்:** மொதேரா இனி அதன் சூரியக் கோயிலுக்காக மட்டுமே அறியப்படாது. குஜராத்தில் உள்ள இந்த கிராமம் இப்போது நாட்டின் முதலாவது சூரியசக்தியால் இயங்கும் கிராமமாக மாறியுள்ளது. இன்று, மொதேரா கிராமம் முழுமையாக சூரிய ஆற்றலில் இயங்கி, ஒட்டுமொத்த நாட்டிற்கும், நிலையான வளர்ச்சிக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது.

- **புதிய வாய்ப்புகள்:** உத்தரப் பிரதேசத்தின் பிரதாப்கர் மாவட்டத்தில் நெல்லிக்காய் புதிய வாய்ப்புகளுக்கான ஒரு முக்கிய ஆதாரமாக உருவெடுத்து வருகிறது. 'ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு' திட்டத்தின் மூலம் நெல்லிக்காய் சார்ந்த உள்ளூர் தொழில்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. இன்று, பிரதாப்கர் மாவட்டத்தில் நெல்லிக்காய் பதப்படுத்தும் பணியில் சுமார் 100 நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

- **சத்துக்கள் நிறைந்த முருங்கை:** சத்தீஸ்கர் மாநிலம் 'ஒவ்வொரு வீட்டிலும் முருங்கை' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. இதன் மூலம், சத்துக்கள் நிறைந்த முருங்கையை மக்கள் தங்களது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர்.

- **அஷ்டவிநாயகர் யாத்திரை:** தாய்லாந்து நாட்டு பக்தர்களிடையே அஷ்டவிநாயகர் யாத்திரையை பிரபலப்படுத்திய பந்தூன் திர்காநோன் என்பவரின் முயற்சிகளுக்கு நன்றிகள். இவர் கடந்த 2002-ம் ஆண்டில், வடக்கு தாய்லாந்தில் உள்ள சியாங் மாய் என்ற இடத்தில் கணேஷ் ஹிமால் அருங்காட்சியகத்தை நிறுவினார்; இன்று இந்த அருங்காட்சியகத்தில் 10,000-க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

- **போதை ஒழிப்பு பிரச்சாரம்:** 'போதைப்பழக்கம் இல்லாத இளைஞர்கள் இயக்கத்தின்' கீழ், நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிராக ஒரு முக்கியமான உறுதிமொழியை எடுத்துள்ளனர். அவர்கள் போதைப்பொருட்களிலிருந்து விலகி இருப்பதற்கு உறுதியளித்துள்ளதுடன், இந்த விழிப்புணர்வு செய்தியை மற்றவர்களுக்கும் பரப்பும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

- **ஊக்கமளிக்கும் முன்மாதிரி:** இயற்கையுடனான நமது உறவு என்பது அதை வெறுமனே பாதுகாப்பதோடு மட்டும் முடிந்துவிடுவதில்லை. பல நேரங்களில், நாம் இயற்கையை கவனித்துக்கொள்ளும் போது, அது நமது வாழ்க்கைக்கு ஒரு சிறந்த ஆதரவாகவும் மாறுகிறது. மேற்கு வங்காளத்தின் சுந்தரவனப் பகுதியில் உள்ள சில பெண்கள், இந்த பிணைப்பிற்கு ஒரு ஊக்கமளிக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகின்றனர்.

- **யானைக் கூட்டங்கள்:** அஸ்ஸாம் மாநிலத்தில் சோனாய் ரூபாய் வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ளது. இந்த சரணாலயத்திற்கு தற்போது யானைகள் மீண்டும் திரும்பி வந்துள்ளன. பல ஆண்டுகளாக யானைகள் நடமாட்டமே இல்லாத ஒரு பகுதியில், இப்போது மீண்டும் யானைகள் கூட்டம் கூட்டமாக உலா வருவதைக் காண முடிகிறது.

மனதின் குரல் உரையைக் கேட்க, இந்த கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

NEW INDIA SAMACHAR

VOLUME 7, ISSUE 08 | OCTOBER 16-31, 2026

EDITOR IN CHIEF
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

CHIEF CONSULTING EDITOR
SANTOSH KUMAR

SENIOR ASST. CONSULTING EDITOR
PAWAN KUMAR

ASST. CONSULTING EDITORS
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

LANGUAGE EDITORS
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

SENIOR DESIGNER
PHOOL CHAND TIWARI

DESIGNERS
SATYAM SINGH
ANIL KUMAR



CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES
https://newindiasamachar.pib.gov.in/news.aspx
TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'

உள் பக்கங்களில்...



ஒரே பாரதம் – உன்னத பாரதம்

கலாச்சார ஒருங்கிணைப்பு முதல் திட்டங்களின் ஒன்றிணைப்பு வரை

ஒரு தேசமும், சமுதாயமும் செழித்து வளர்வதற்கு ஒற்றுமையே வலுவான அடித்தளமாகும். 2015 அக்டோபர் 31 அன்று சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளில், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கெவாடியா என்னும் புனித பூமியிலிருந்து 'ஒரே பாரதம் – உன்னத பாரதம்' என்ற முன்முயற்சியைத் தொடங்கி வைத்தார். சுமார் 550 சுதேச சமஸ்தானங்களை ஒரே நாடாக ஒன்றிணைத்த சர்தார் படேல் அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் ஈர்க்கப்பட்டு, 11 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்த 'ஒரே பாரதம் – உன்னத பாரதம்' என்ற முன்முயற்சியானது, தற்போது வரி விதிப்பு, உணவுப்பொருள் வழங்கல், ஓய்வூதியம், அரசியலமைப்பு, தேர்வுகள் மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட துறைகளில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு வழிவகுத்துள்ளது. இவை அனைத்தும் "ஒரே நாடு, ஒரே அமைப்பு" என்ற கட்டமைப்பின் தூண்களாக விளங்குகின்றன... |10-27

செமிகான் இந்தியா 2026

செமிகண்டக்டர்

புத்தாக்கம், முதலீடு மற்றும் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை வழங்குதல்

நவீன தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் இணையுமாறு இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள திறமையான இளைஞர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.... | 32-33



சிறப்புக் கட்டுரை: பிரதமரின் கட்டுரை

"ஸ்ரீ அசோக் சிங்கால் அவர்களின் ஆளுமை உறுதியான மனநிறைவு மற்றும் எளிமையின் ஒரு அற்புதக் கலவையாகும்."



அசோக் சிங்கால் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, அவரது வாழ்க்கை மற்றும் கருத்துக்களுக்கு மரியாதை செலுத்தும் கட்டுரை ஒன்றைப் பிரதமர் மோடி பகிர்ந்துள்ளார் | 7-9

செய்திச் சுருக்கங்கள் | 4-5

ஆளுமை: கோமரம் பீம்
'நீர், வனம், நிலம்' என்ற முழங்கிய மனிதர் | 6

ரபி பருவப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு; பசுமை ஆற்றல் வழித்தடத்தின் மூன்றாம் கட்டத்திற்கு ஒப்புதல்
மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் | 28-29

எதிர்காலத்திற்காக இளைஞர்களைத் தயார்படுத்தும் மத்திய அரசு
51,000–க்கும் அதிகமான பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன | 30-31

போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல்... தற்சார்பு இந்தியாவை வலுப்படுத்துதல்
10 ஆண்டுகளை நிறைவு செய்யும் உடான் திட்டம் | 34-35

வங்காளத்தில் பெண்களுக்கு அதிகாரமளித்தல்
அன்னபூர்ணா திட்டத்தின் கீழ் 4–வது தவணையாக ரூ. 3,000 விடுவிப்பு | 36-37

வளர்ச்சியோடு இணைந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு
பருவநிலை மாற்றம் குறித்த சர்வதேச மாநாட்டில் பிரதமர் மோடியின் உரை | 38-39

தலைநகரின் போக்குவரத்து இணைப்பிற்கு புதிய உத்வேகம்
பாரபுல்லா 3–ம் கட்ட உயர்மட்ட வழித்தடத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திறந்து வைத்தார் | 42

72–வது தேசிய திரைப்பட விருதுகள்

இந்திய சினிமாவில் எதிர்கால வாய்ப்புகள்



72–வது தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் வழங்கினார்.... | 40-41



Published: Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
E-Mail : response-nis@pib.gov.in, RNI No. : DELENG/2020/78811

ஆசிரியர் மேசையிலிருந்து...

சர்தார் படேலின் தொலைநோக்குப் பார்வை

ஒற்றுமை உணர்வின் அடிப்படையிலானது

'ஒரே பாரதம் – உன்னத பாரதம்' முன்னெடுப்பின் 11 ஆண்டுகள்

அன்பான வணக்கங்கள்!

வரைபடம் அல்லது புவியியல் எல்லைகளை வைத்து மட்டுமே ஒரு நாட்டின் அரசியல் வலிமை மதிப்பிடப்படுவதில்லை; அது ஆழமான ஒருமைப்பாட்டு உணர்வால் மட்டுமே உருவாக்கப்பட்டு நிலைநிறுத்தப்படுகிறது. இந்த அசைக்க முடியாத நம்பிக்கையை, பாரத ரத்னா சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் நாடு சுதந்திரம் அடைந்த உடனேயே தனது நெஞ்சில் ஏந்தினார். அதன் காரணமாகவே, சிதறிக்கிடந்த 550-க்கும் மேற்பட்ட சுதேச சமஸ்தானங்களை ஒரே நாடாக அவர் ஒன்றிணைத்தார். நாம் வரலாற்றை எழுதுவதில் மட்டும் நேரத்தை வீணடிக்காமல், புதிய வரலாற்றைப் படைக்க பாடுபட வேண்டும் என்று சர்தார் படேல் நம்பினார். இந்த உணர்வுதான் அவருடைய முடிவுகளில் அப்படியே எதிரொலித்தது.

நடைமுறையில் ஒரு யதார்த்தவாதியாகவும், உறுதியான நேர்மையில் உண்மையைக் கடைபிடிப்பவராகவும், மனிதநேயமிக்க செயல்பாட்டாளராகவும், தேசிய நலனை நோக்கமாகக் கொண்டவராகவும் விளங்கிய சர்தார் படேலுக்கு, 'ஒரே பாரதம் – உன்னத பாரதம்' என்ற தொலைநோக்குப் பார்வையே எல்லாவற்றையும் விட முதன்மையானதாக இருந்தது. இந்த உணர்வின் அடையாளமாகவே 'ஒற்றுமையின் சிலை' கம்பீரமாக நிற்கிறது; நாடு முழுவதும் உள்ள விவசாயிகளின் விவசாயக் கருவிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட இரும்பைக் கொண்டுதான் இந்தச் சிலை உருவாக்கப்பட்டது.

அந்தப் பாரம்பரியத்தை முன்னோக்கி எடுத்துச் செல்லும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2015, அக்டோபர் 31 அன்று கெவாடியாவில் இருந்து 'ஒரே பாரதம் – உன்னத பாரதம்' என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்க உறுதியேற்றார். கடந்த 11 ஆண்டுகளில், இந்த உறுதிமொழியானது தொடர்ச்சியான கொள்கைகளின் மூலம் நடைமுறை எதார்த்தமாக மாற்றப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வரி முறை மாநில சந்தைகளை ஒன்றிணைத்தது; 'ஒரே பதவி ஒரே ஓய்வூதியம்' திட்டம் ராணுவ வீரர்களிடையே பல தசாப்தங்களாக இருந்த முரண்பாடுகளைக் களைந்தது; அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 370 நீக்கப்பட்டதன் மூலம் ஜம்மு-காஷ்மீர் உள்பட ஒட்டுமொத்த நாட்டிற்கும் அரசியலமைப்பு உரிமைகள் நீட்டிக்கப்பட்டன; மேலும் நாடு முழுவதும் ஒரே மாதிரியான இந்திய நேரக் குறிப்பை உறுதி செய்வதற்கான விதிமுறைகள் நிறுவப்பட்டன.

புதிய கல்விக் கொள்கையில் இந்திய மொழிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்துடன்-தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மலையாளம், ஒடியா மற்றும் கன்னடம் ஆகியவற்றுடன் கூடுதலாக மராத்தி, பங்களா, அஸ்ஸாமி, பாலி மற்றும் பிராகிருதம் ஆகிய மொழிகளுக்கும் 'செம்மொழி' அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பது, ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துகிறது. மிக வேகமாக விரிவடைந்து வரும் ரயில், சாலை மற்றும் இணையதளக் கட்டமைப்புகளும் கிராமங்களை நகரங்களுடன் இணைப்பதன் மூலம் இந்த ஒற்றுமையை வலுப்படுத்தியுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் நாம் செய்வதைப் போலவே, இந்த ஆண்டும் அக்டோபர் 31 அன்று சர்தார் படேலின் பிறந்தநாளை நாம் கொண்டாடும் வேளையில், இந்தத் தருணம் அவரை வெறுமனே நினைவுகூர்வதற்காக மட்டுமல்லாமல், நமது உறுதிமொழியை மீண்டும் புதுப்பிப்பதற்கும் ஒரு நல்ல வாய்ப்பாக அமைகிறது. இந்த தேசிய ஒற்றுமை தின பதிப்பின் நமது அட்டைப் பக்கக் கட்டுரை 11 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய 'ஒரே பாரதம் – உன்னத பாரதம்' என்ற உணர்வு, தற்போதைய கொள்கைகளையும், நிர்வாக அமைப்புகளையும் ஒன்றிணைப்பதற்கான உறுதியான அர்ப்பணிப்பாக உருவெடுத்துள்ளதை ஆராய்கிறது.

ஆளுமைப் பகுதியில், முதன்முதலாக 'நீர், வனம், நிலம்' என்ற முழக்கத்தை எழுப்பிய கோமரம் பீம் பற்றியும், அதனுடன் மத்திய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளின் சிறப்பம்சங்கள் குறித்தும் படித்துத் தெரிந்து கொள்ளலாம். மேலும், இந்த இதழில் உடான் திட்டத்தின் 10 ஆண்டுகாலப் பயணம் மற்றும் கடந்த இரண்டு வாரங்களில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பங்கேற்ற பொது நிகழ்ச்சிகளின் தொகுப்பும் இடம்பெற்றுள்ளன. உள் பக்கத்தில் உள்ள மனதின் குரல் உரை மற்றும் ஆசாத் ஹிந்த் அரசு உருவான தினத்தை (அக்டோபர் 21) குறிக்கும் வகையில் பின் அட்டைப் பக்கத்தில் இடம் பெற்றுள்ள சிறப்புக் கட்டுரை ஆகியவை இந்த இதழின் பிற முக்கிய சிறப்பம்சங்கள் ஆகும்.

தொடர்ந்து உங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.



(திரேந்திர ஓஜா)

இந்த இதழை இந்தி, ஆங்கிலம் மற்றும் 11 பிற மொழிகளில் படிக்க/பதிவிறக்கம் செய்ய:
https://newindiasamachar.pib.gov.in/

மின்னஞ்சல்



நியூ இந்தியா சமாச்சார் இதழ் மிகவும் பயனுள்ளதாக உள்ளது

நான் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழின் வழக்கமான வாசகன் ஆவேன். மத்திய அரசின் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடப்பு நிகழ்வுகள் குறித்துத் தொடர்ந்து தெரிந்து கொள்வதற்கு இந்த இதழ் எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இது நாட்டின் முன்னேற்றம் குறித்த எனது அறிவை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஒரு பொறுப்புள்ள குடிமகனாக எனது பங்கை நன்றாகப் புரிந்துகொண்டு, நாட்டின் வளர்ச்சியில் தீவிரமாகப் பங்கேற்பதற்கும் எனக்கு ஊக்கமளிக்கிறது.

நிவேஷ் கோயல்
goyalnivesh98@gmail.com

புதிய இதழுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்

எனக்கு 'நியூ இந்தியா சமாச்சார்' இதழைப் படிப்பது மிகவும் பிடிக்கும், மேலும் ஒவ்வொரு புதிய இதழுக்காகவும் நான் ஆவலுடன் காத்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் நான் இதைப் படிக்கும்போது, இந்தியாவின் கலாச்சார பன்முகத்தன்மை பற்றி மேலும் பல விஷயங்களைக் கற்றுக்கொள்கிறேன். இதனுடன் சேர்த்து, இந்தியாவின் வளர்ச்சித் திறனையும் இந்த இதழ் எடுத்துக் காட்டுகிறது. 'வளர்ச்சியடைந்த இந்தியா 2047' என்ற இலக்கை அடைவதற்காக நாடு ஒவ்வொரு துறையிலும் மிக வேகமாக முன்னேறி வருவதை இது நமக்குக் காட்டுகிறது.

shivanshchouhan397@gmail.com

நமது இலக்குகளை நோக்கிய பயணத்தை முன்னெடுத்துச் செல்லுதல்

நியூ இந்தியா சமாச்சார் இதழை முதன்முறையாக இப்போதுதான் கிட்டத்தட்ட முழுமையாகப் படித்தேன். இனி அடுத்த இதழுக்காக நான் காத்திருப்பேன். இதில் பல பயனுள்ள செய்திகள் இடம்பெற்றுள்ளன. இது, இலக்குகளை நோக்கிய நமது தேசத்தின் முடிவில்லாப் பயணத்தை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. இந்தியா எப்போதுமே அறிவின் மையமாகத் திகழ்ந்து வருகிறது. எனக்கு ஒரு ஆலோசனை உள்ளது: ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் வேர்களை வலுப்படுத்துவதற்கு குழந்தைகளின் வளர்ச்சி இன்றியமையாததாகும். எனவே, குழந்தைகள் வளர்ச்சி என்ற தலைப்பு இந்த இதழில் இடம் பெற வேண்டும், இதன் மூலம் இந்தத் தளத்தின் மூலம் நமது எதிர்காலத்தை இன்னும் பாதுகாப்பானதாக மாற்ற முடியும்.

nanda.purnimaa@gmail.com

அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த விரிவான தகவல்கள்

நியூ இந்தியா சமாச்சார் இதழ் கடந்த ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளியாகி வருகிறது. இது பலராலும் பரவலாகப் படிக்கப்படும் ஒரு இருவார இதழாகும். இந்த இதழ் அரசின் பல்வேறு திட்டங்கள், முக்கியத் திட்டப்பணிகள், புதிய கல்விக் கொள்கை, முக்கிய சட்டத் திருத்தங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகள் மற்றும் உலக அளவில் நிலவும் வலுவான வர்த்தக உறவுகள் குறித்த விரிவான தகவல்களை வழங்குகிறது. இந்த இதழ் எனது அறிவை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

யோகேஷ்வர் புவா
buwayogesh82@gmail.com

Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in

செய்திச் சுருக்கம்

பிரதமரின் விஸ்வகர்மா திட்டம்

'மரியாதை, திறன் மற்றும் செழிப்பு' ஆகியவற்றை உறுதி செய்யும் விஸ்வகர்மா திட்டம் தொடங்கப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

30 லட்சம் கைவினைக்கலைஞர்கள் பதிவு செய்துள்ளனர்







நாடு முழுவதும் உள்ள கைவினைக்கலைஞர்களின் மரியாதை, திறன் மற்றும் செழிப்பை வளர்க்கும் நோக்கில் தொடங்கப்பட்ட 'பிரதமரின் விஸ்வகர்மா திட்டம்', முதல் மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே 30 லட்சத்திற்கும் அதிகமான கைவினைக்கலைஞர்களைப் பதிவு செய்து அவர்களுக்கு ஆதரவளித்துள்ளது. 2023 செப்டம்பர் 17 அன்று இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து, இதுவரை சுமார் 24.50 லட்சம் நபர்களுக்கு அடிப்படைத் திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக, இந்திய அஞ்சல் துறை வழியாக 18.15 லட்சம் நவீனக் கருவிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொல்கத்தாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பேசிய மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் ஜிதன் ராம் மாஞ்சி, "6.18 லட்சம் விஸ்வகர்மா பயனாளிகளுக்கு 5 சதவீத சலுகை வட்டி விகிதத்தில் ரூ.1 லட்சம் வரையிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன; இதன் மொத்த மதிப்பு ரூ.5,297 கோடியாகும்" என்று தெரிவித்தார். 7 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இத்திட்டதில் இணைய விண்ணப்பித்துள்ளனர்.

சிறுத்தைப்புலிகள் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடர்ந்து, தற்போது காண்டாமிருகங்கள் பாதுகாப்புத் திட்டம் தொடக்கம்

உலகில் உள்ள காண்டாமிருகங்களில் சுமார் 80% காண்டாமிருகங்கள் வாழும், நாட்டின் ஒரே மாநிலமாக அஸ்ஸாம் திகழ்கிறது. இதன் காரணமாக, உலக காண்டாமிருகங்கள் தினத்தை முன்னிட்டு, அஸ்ஸாம் மாநிலத்தின் காசிரங்கா பகுதியில் வேட்டையாடுதலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வெகுவாகப் பாராட்டினார். மேலும், நாட்டில் காண்டாமிருகங்களின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதற்காக 'காண்டாமிருகங்கள் பாதுகாப்புத் திட்டத்தின்' தொடக்கத்தையும் அவர் அறிவித்தார்.

இந்த 'காண்டாமிருகங்கள் பாதுகாப்பு திட்டத்தின்' கீழ், காண்டாமிருகங்கள் வாழும் மாநிலங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும். இந்தத் திட்டமானது காண்டாமிருகங்களின் பாதுகாப்பு, அவற்றின் வாழ்விடங்களைப் பராமரித்தல், இனப்பெருக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் அவற்றின் எண்ணிக்கையைக் கண்காணித்தல் போன்ற செயல்பாடுகளில் கவனம் செலுத்தும். பீகார் மற்றும் மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளில் காண்டாமிருகங்கள் மீண்டும் திரும்பி வந்துள்ளன அல்லது அவை அங்கு நன்றாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார். உத்தரப் பிரதேசத்தின் துத்வா பகுதியில் காண்டாமிருகங்களை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வெற்றிகள் அனைத்தும், வனவிலங்குகளைப் பாதுகாப்பதிலும், அவற்றின் பராமரிப்பிலும் மக்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பைக் காட்டுகின்றன என்றும் அவர் கூறினார்.



வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு இந்தியாவில் திறன் மேம்பாடு

நாட்டின் வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்துவதோடு, வெளிநாடுகளில் உள்ள வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ப நமது இளைஞர்களின் திறன்களையும் மத்திய அரசு மேம்படுத்தி வருகிறது. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம், தகுதிவாய்ந்த பணியாளர்களின் திறன்கள் மற்றும் பொறுப்புகளை வெளிநாடுகளின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப சீரமைப்பதற்காக சுமார் 20 நாடுகளுடன் இணைந்து ஒரு செயல்முறையைத் தொடங்கியுள்ளது.

2026 மே மாதம் வெளியான நித்தி ஆயோக்கின் ஆய்வறிக்கையின்படி, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை 1.85 கோடியாக (18.5 மில்லியன்) உள்ளது. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியில் ஒத்துழைப்பிற்காக ஆஸ்திரேலியா, டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், கத்தார், சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட 8 நாடுகளுடன் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. அதே வேளையில், வெளியுறவு அமைச்சகம் திறன் மேம்பாட்டிற்கான குறிப்பிட்ட விதிகளை உள்ளடக்கிய 22 இடப்பெயர்வு மற்றும் செயல்பாடுகளுக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.



'மை பாரத்' திட்டத்தில் இணைந்த 3 கோடி இளைஞர்கள்... பங்கேற்பிற்கான வலுவான அர்ப்பணிப்பு

இளைஞர்களின் பங்களிப்பிற்கான மிகப்பெரிய தளங்களில் ஒன்றான 'மை பாரத்' (https://mybharat.gov.in/) இணையதளத்தில், மூன்றாண்டுகளுக்குள் 3 கோடிக்கும் அதிகமான இளைஞர்கள் இணைந்துள்ளனர். இந்தச் சாதனை, தலைமைப் பண்பு, அனுபவப்பூர்வமான கற்றல், தன்னார்வத் தொண்டு, பொது சேவையில் ஈடுபாடு மற்றும் தேசக் கட்டமைப்பு சார்ந்த செயல்பாடுகளில் இளைஞர்களின் வளர்ந்து வரும் பங்களிப்பை பிரதிபலிக்கிறது.

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கடந்த 2023 அக்டோபர் 31 அன்று இந்த 'மை பாரத்' திட்டத்தைத் தொடங்கி வைத்தார். தற்பொழுது இந்த 'மை பாரத்' தளம் வழியாக 'வளர்ச்சியடைந்த இந்தியா இளம் தலைவர்கள் உரையாடல் 2027' போன்ற பல்வேறு முன்முயற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன; இது இளைஞர்கள் தங்களது புதிய கருத்துக்கள், படைப்பாற்றல், தலைமைப் பண்பு மற்றும் புத்தாக்க சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குகிறது.



இந்திய மின்சாரத்தால் ஒளிரும் நேபாளம்

'அண்டை நாட்டிற்கு முன்னுரிமை' என்ற கொள்கையின் அடிப்படையில், இந்தியா இனி நேபாளத்திற்கு தினமும் 18 மணி நேரம் (நள்ளிரவு 12:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை) மின்சாரம் வழங்கவுள்ளது. இந்த முடிவு இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே உள்ள நெருக்கமான மற்றும் நீண்டகால எரிசக்தி ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும்.

மத்திய எரிசக்தித்துறை அமைச்சகம் கடந்த செப்டம்பர் 13 முதல் நேபாள மின்சார வாரியத்திற்கு மின்சார ஏற்றுமதியைத் தொடங்கியுள்ளது; இந்த மின் விநியோகம் 2026 டிசம்பர் 31 வரை தொடரும். அதன் பின்னர், 2027 ஜனவரி முதல் வழங்கப்பட வேண்டிய மின்சாரத்தின் அளவு மற்றும் கால அளவை நிர்ணயம் செய்வதற்காக 2026 டிசம்பர் மாதத்தில் மறுஆய்வுக் கூட்டம் நடத்தப்படும். நேபாளத்தில் சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தைத் தொடர்ந்து, அந்நாட்டின் மின்சாரக் கட்டமைப்புகள் பெருமளவில் சேதமடைந்து மின் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தற்போது முசாபர்பூர்–தால்கேபர் 400 கிலோ வோல்ட் டிசி (DC) வழியாக 600 மெகாவாட் வரையிலும், தன்பூர்–மகேந்திரநகர் 132 கிலோவாட் S/C தடம் வழியாக 54 மெகாவாட் வரை மின்சாரம் வழங்கப்படவுள்ளது.



மண்ணின் கார்பன் சத்தை அதிகரித்ததற்காக இந்தியாவில் முதல்முறையாக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது

பஞ்சாப் மற்றும் ஹரியானாவைச் சேர்ந்த விவசாயிகள் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் புதிய விவசாய முறைகளைக் கையாண்டதன் காரணமாக, அவர்களுக்குப் பொருளாதார ரீதியான நன்மைகள் கிடைத்துள்ளன. மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த தனித்துவமான முன்முயற்சியின் கீழ், 2,500–க்கும் மேற்பட்ட விவசாயிகள் தலா ரூ.3,000 முதல் ரூ.15,000 வரை பணம் பெற்றுள்ளனர்; இதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.2.9 கோடியாகும். நாட்டில் முதல்முறையாகத் தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டம், தற்போது ஏழு மாநிலங்களில் 1 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் மற்றும் 20 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கான முதற்கட்ட நிதி பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது. கடந்த 2019–ம் ஆண்டு தொடங்கப்பட்ட 'குரோ இண்டிகோ நிறுவனத்தின்', 'ஆதி' கார்பன் திட்டத்தின் மூலமாக விவசாயிகள் இந்த பணத்தைப் பெறுகிறார்கள். 2019 முதல் 2022 வரையிலான காலக்கட்டத்தில், விவசாயிகள் நேரடியாக நெல் விதைப்பு செய்தல், குறைந்த உழவு முறை மற்றும் பயிர் கழிவு மேலாண்மை போன்ற தொழில்நுட்பங்களைக் கையாண்டனர். இந்தத் திட்டத்தின் கணக்கீட்டின்படி, இத்தகைய முறைகளால் 4,500 கோடி லிட்டர் தண்ணீர் சேமிக்கப்பட்டுள்ளது; 2 லட்சம் டன்னுக்கும் அதிகமான பயிர் கழிவுகள் எரிக்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளது; மேலும் காற்றில் சுமார் 1,000 டன் அளவிலான தீங்கு விளைவிக்கும் பி.எம் 2.5 (PM2.5) துகள்கள் வெளியிடப்படுவதும் குறைக்கப்பட்டுள்ளது.



கோமரம் பீம்

"நீர், வனம், நிலம்" என்ற முழக்கத்தை உருவாக்கிய பழங்குடியினப் போராளி

கோமரம் பீம் அவர்கள் துணிச்சல் மற்றும் தியாகத்தின் அடையாளமாக நினைவுகூரப்படுகிறார். அவர் "நீர், வனம் மற்றும் நிலம்" என்ற முழக்கத்தை முதன்முதலில் எழுப்பிய ஒரு அச்சமற்ற பழங்குடியினப் போராளி ஆவார். ஹைதராபாத் நிஜாம் மற்றும் பிரிட்டிஷ் ஆட்சி ஆகிய இருதரப்பையும் தனி மனிதராக எதிர்த்து நின்று, அவர்களுக்கு எதிராக ஒரு கொரில்லாப் போரை நடத்தினார். கோண்ட் பழங்குடியின சமூக மக்கள் மத்தியில், கோமரம் பீம் அவர்கள் ஒரு தெய்வத்தைப் போல போற்றப்படுகிறார். கிளர்ச்சி மற்றும் எதிர்ப்பின் அடையாளமாகத் திகழ்ந்த பீம், லட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் அழியாத இடத்தைப் பிடித்துள்ளார்.



பிறப்பு: அக்டோபர் 22, 1901
இறப்பு: அக்டோபர் 8, 1940

கோமரம் பீம் அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் கொடுங்கோன்மைக்கும், சுரண்டலுக்கும் எதிராகப் போராடினார்; இன்றும் கூட பழங்குடியின மக்கள் அவரை ஒரு தெய்வமாகப் போற்றி வணங்குகிறார்கள். அவர் 1901–ம் ஆண்டு அக்டோபர் 22 அன்று, தற்போதைய தெலங்கானா மாநிலத்தின் கோமரம் பீம் மாவட்டத்தில் உள்ள சங்கேபள்ளி கிராமத்தில் ஒரு கோண்ட் பழங்குடியினக் குடும்பத்தில் பிறந்தார். நிஜாம் மற்றும் பிரிட்டிஷ் ஆகிய இருதரப்பினரின் ஒடுக்குமுறைக்கு எதிராக அவர் இடைவிடாத ஒரு போராட்டத்தை நடத்தினார்.


ஒரு நிலப்பிரபுவின் அத்துமீறல்களையும் கொடுமைகளையும் எதிர்த்த காரணத்தால், அவர் தனது சொந்தக் கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். பின்னர், அவர் அஸ்ஸாம் மாநிலத்தின் தேயிலைத் தோட்டங்களைச் சென்றடைந்தார். அங்கு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் படும் துயரங்களை அவர் நேரில் கண்டார். அந்தத் தேயிலைத் தோட்டங்களில்தான், தன்னைச் சுற்றி நடந்து கொண்டிருந்த பல்வேறு இயக்கங்கள் மற்றும் போராட்டங்களில் இருந்து அவர் பெரும் உத்வேகத்தைப் பெற்றார். அங்கு அவர் எழுதவும், படிக்கவும் கற்றுக்கொண்டார்; அத்துடன் அநீதிக்கு எதிரான மிகச் சிறந்த ஆயுதம் என்பது ஒரு ஒருங்கிணைந்த போராட்டம் மட்டுமே என்பதை அவர் ஆழமாக உணர்ந்தார். மக்களை ஒன்றிணைத்து விழிப்படையச் செய்ய வேண்டும் என்ற ஒரு பெரும் லட்சியத்தோடு அவர் மீண்டும் தனது சொந்த ஊருக்குத் திரும்பி வந்தார்.

1926 முதல் 1940 வரையிலான காலகட்டத்தில், நிஜாமின் ஆட்சிக்கு எதிராகத் தொடர்ந்து நீடித்த ஒரு கொரில்லாப் போராட்டத்தைக் கோமரம் பீம் முன்னெடுத்தார். அவர் காடுகளுக்குள் ஒரு கொரில்லாப் படையைக் கட்டியெழுப்பினார். தனது போராளிகளுக்கு வில், அம்பு, ஈட்டிகள் மற்றும் பாரம்பரிய ஆயுதங்களைத் தவிர வேறு பெரிய ஆயுதங்கள் எதையும் அவர் வழங்கவில்லை. இருந்தபோதிலும் அவர்களால் நவீன மற்றும் அதிநவீன உபகரணங்களைக் கொண்டிருந்த நிஜாமின் படைகளுக்கு எதிராக கடுமையான தாக்குதலை நடத்த முடிந்தது. பீம் கிராமங்கள்தோறும் பயணம் செய்து, மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டு வந்த அத்துமீறல்களுக்கு எதிராக அவர்களை ஒன்றிணைத்தார். பல சந்தர்ப்பங்களில், வரி வசூலிப்பதற்காகக் கிராமங்களுக்குள் ராணுவ வீரர்கள் நுழைந்தபோது, பீமும் அவருடைய ஆட்களும் அவர்களை அடித்து விரட்டினர்.

அவர் அல்லூரி சீதாராம ராஜு என்பவரால் ஆழமாக ஈர்க்கப்பட்டதாக நம்பப்படுகிறது. தேசத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அவர், 1940 அக்டோபர் 8 அன்று அஸ்வினி பூர்ணிமா நாளில் நடைபெற்ற ஒரு கடுமையான போரின் போது, நிஜாமின் ராணுவத்தின் துரோகம் மற்றும் வஞ்சகத்தின் காரணமாகக் கொல்லப்பட்டார். கடந்த 2016–ம் ஆண்டில், ஆசிஃபாபாத் மாவட்டம் 'கோமரம் பீம் ஆசிஃபாபாத்' மாவட்டம் என மறுபெயரிடப்பட்டது. அங்கு ஒரு நினைவிடமும், கோமரம் பீம் அருங்காட்சியகமும் நிறுவப்பட்டுள்ளன. கோண்ட் பழங்குடியின மக்கள் ஒவ்வொரு ஆண்டும் அஸ்வயுஜ பூர்ணிமா நாளில் அவருடைய நினைவு நாளை அனுசரிக்கின்றனர். இந்தத் தருணத்தில் ஜோதேகாட் என்ற இடத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுகிறது; இந்த இடத்தில்தான் 1940–ல் கோமரம் பீம் மரணமடைந்தார்.

2025 அக்டோபர் 26 அன்று ஒலிபரப்பப்பட்ட 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் 127–வது பகுதியில், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கோமரம் பீம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். அவர் பேசுகையில், "நான் குறிப்பிடும் மாபெரும் ஆளுமை கோமரம் பீம் ஆவார். அவருடைய பிறந்தநாள் அக்டோபர் 22 அன்று கொண்டாடப்பட்டது. கோமரம் பீம் நீண்ட காலம் வாழவில்லை; அவர் 40 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார்; ஆனால் அவர் தனது வாழ்நாளில் எண்ணற்ற மக்களின், குறிப்பாகப் பழங்குடியின சமூகத்தின் இதயங்களில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளார். நிஜாமுக்கு எதிராகப் போராடியவர்களுக்கு அவர் புதிய வலிமையை அளித்தார். நிஜாமின் ஆட்சிக்கு அவர் ஒரு பெரிய சவாலாக மாறினார். அவர் 1940–ல் நிஜாமின் ஆட்களால் கொல்லப்பட்டார். இவரைப் பற்றி இளைஞர்கள் தங்களால் இயன்றவரை அதிகமாகத் தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறினார். மேலும் அவர் தொடர்ந்து, "கோமரம் பீம் ஜி–க்கு எனது பணிவான நினைவஞ்சலி; அவர் என்றென்றும் மக்களின் இதயங்களில் நிலைத்திருப்பார்" என்றும் கூறினார்.

“அசோக் சிங்கல் அவர்களின் ஆளுமை மனஉறுதி மற்றும் எளிமையின் அற்புதமான கலவையாவும்”



பிரதமர்
திரு. நரேந்திர மோடி

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் செப்டம்பர் 27 அன்று அசோக் சிங்கால் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரது அசைக்க முடியாத நம்பிக்கை, எளிமை மற்றும் சமூக ஒற்றுமைக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றை நினைவு கூர்ந்தார். இந்த ஆண்டு அசோக் சிங்கால் அவர்கள் பிறந்த நூற்றாண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இந்தத் தருணத்தில், சிங்கால் அவர்களின் வாழ்க்கை மற்றும் லட்சியங்கள் குறித்த கட்டுரை ஒன்றைப் பகிர்ந்துள்ள பிரதமர், அவரது அயராதப் பணிகளையும் நினைவு கூர்ந்தார்.

ஒரு அழகான பழமொழி உண்டு, "மரம் தனது சொந்த பழத்தை தானே உண்பதில்லை; நதியும் தனது நீரைத் தனக்காகவே வைத்துக் கொள்வதில்லை. இவை இரண்டுமே மற்றவர்களின் நன்மைக்காகவே இருக்கின்றன". நமது துறவிகளும் ஞானிகளும் நீண்ட காலமாக நமக்குக் கற்பித்த விஷயம் என்னவென்றால், நம்மைச் சுற்றியுள்ளவர்களின் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை, தனிமனித சாதனைகளை விட மிக உயர்ந்த அர்த்தத்தைப் பெறுகிறது என்பதுதான். இந்த உணர்வு யாரிடம் தொடர்ந்து பிரதிபலித்தது என்று பார்த்தால், அது அசோக் சிங்கால் அவர்களிடம் தான்.

செப்டம்பர் 27 முதல், ஆன்மீகத் தேடல், கலாச்சார விழிப்புணர்வு மற்றும் பல தசாப்த கால அர்ப்பணிப்புடன் கூடிய நிறுவனப் பணிகளை ஒன்றிணைத்த ஒரு சிறந்த ஆளுமையைக் கொண்டாடும் வகையில், அவரது பிறந்தநாள் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறோம்.

அசோக் ஜி அவர்களுடன் பழகுவதற்கும், அவருடைய அன்பைப் பெறுவதற்கும் எனக்கு எண்ணற்ற வாய்ப்புகள் கிடைத்ததை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன். இதில் ஆரம்பகால நிகழ்வுகளில் ஒன்று 1981–ம் ஆண்டில் நிகழ்ந்தது; அப்போது நான் எனக்கு அளிக்கப்பட்ட நிறுவனப் பணிகளைச் செய்து வரும் ஒரு இளம் தொண்டராக இருந்தேன். அப்போது அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. இயல்பாகவே, அது எனக்கு ஒரு குறிப்பிடத்தக்கத் தருணமாக அமைந்தது. வரவிருக்கும் ஒரு முக்கியமான திட்டத்தைப் பற்றி அந்தக் கடிதத்தில் எழுதியிருந்த அவர், நான் செய்ய வேண்டிய சில பணிகளையும் குறிப்பிட்டிருந்தார்.

அசோக் ஜி அவர்களுடன் பழகுவதற்கும், அவருடைய அன்பைப் பெறுவதற்கும் எனக்கு எண்ணற்ற வாய்ப்புகள் கிடைத்ததை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.

பல தசாப்தங்களாக, அவர் இரவும் பகலும் உழைப்பதை நான் பார்த்திருக்கிறேன். அவர் மிகத் தொலைதூரப் பகுதிகளுக்குக் கூட நீண்ட மற்றும் கடினமான பயணங்களை மேற்கொள்வார். குறிப்பாக குஜராத்தின் பழங்குடியினப் பகுதிகளுக்குப் பயணம் செய்வதில் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்காக இன்னும் என்ன செய்யலாம் என்பதைப் பற்றியே அவருடைய மனம் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டு இருந்தது. நாட்டின் எந்தப் பகுதியாவது இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டால், அசோக் ஜி அங்கு முதலில் சென்றடைபவர்களில் ஒருவராக இருப்பார் அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு தொண்டர்களை வழிநடத்துபவர்களில் ஒருவராக இருப்பார்.

2001 கட்ச் நிலநடுக்கத்திற்குப் பிந்தைய நிகழ்வுகளில் அவருடனான எனது அனுபவங்கள், என் நினைவில் பசுமையாக நிலைத்திருக்கின்றன.

பிரதமரின் முழு கட்டுரையைப் படிக்க இந்த கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்



பிரயாக்ராஜில் வளர்ந்த அசோக் அவர்கள், பெரும்பாலும் சங்கமத்தின் கரையில் மணிக்கணக்கில் அமர்ந்திருப்பார். அந்த ஆற்றின் மீது அவருக்கு இயல்பான ஈர்ப்பு இருந்ததுடன், அந்த இடத்திற்கு வருகை தரும் சான்றோர்கள், ஞானிகள், பக்தர்களுடனும் அவர் ஆழ்ந்த பிணைப்பைக் கொண்டிருந்தார்.

பிறர் மீது அக்கறையும் இரக்கமும் கொண்ட இந்தப் பண்பு, அசோக் அவர்களிடம் அவரது இளமைப் பருவத்திலேயே இயல்பாகவே உருவானது. அவர் மிகவும் புகழ்பெற்ற, செல்வ வளமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தை திரு மகாவீர் அவர்கள், சிறப்புமிக்க நிர்வாகியாகப் பணியாற்றியவர். அவரது சகோதரர்களில் ஒருவரான திரு பி.பி. சிங்கால் அவர்கள், காவல்துறை அதிகாரியாகப் பணியாற்றியதுடன், பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். மற்றொரு சகோதரரான திரு வி.பி. சிங்கால் அவர்கள், திரிபுரா மாநிலம் புதிதாக உருவாக்கப்பட்ட காலகட்டத்தில், அங்கு தலைமைச் செயலாளராகப் பணியாற்றினார். இதர குடும்ப உறுப்பினர்களும் வணிகம் மற்றும் வேளாண்மைத் துறைகளில் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். ஆனால், இளம் வயதிலேயே அசோக் அவர்களின் மனம் முற்றிலும் வேறுபட்ட ஒரு விஷயத்தால் ஈர்க்கப்பட்டிருந்தது... இந்தியாவின் மறுமலர்ச்சியையும், இந்தியத் தாயின் பிள்ளைகளுக்குப் பெருமை சேர்ப்பதையும் நோக்கியதாக அவரது சிந்தனை அமைந்திருந்தது. பிரயாக்ராஜில் வளர்ந்த அசோக் அவர்கள், திரிவேணி சங்கமத்தின் கரையில் பல மணி நேரம் அமர்ந்திருப்பார். நதியின் மீது அவருக்கு இயல்பாகவே ஆர்வம் இருந்தது. அதேவேளையில், அங்கு வருகை தரும் சான்றோர்கள், ஞானிகள், பக்தர்களின் மீதும் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். இது, இந்தியாவின் பண்பாட்டு மாண்புகள் குறித்த ஆழமான புரிதலை அவருக்குள் ஏற்படுத்தியதுடன், சமூகத்திற்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற அவரது எண்ணத்தையும் வலுப்படுத்தியது. பிறருக்காக வாழ வேண்டும் என்ற இந்த விருப்பமே அவரை ஆர்.எஸ்.எஸ். அமைப்பின்பால் ஈர்த்தது. அவரிடம் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பையும் மிகுந்த ஆர்வத்துடனும், ஒழுக்கத்துடனும், கடமை உணர்வுடனும் அவர் மேற்கொண்டார்.

அசோக் சிங்கால் அவர்கள் விடாமுயற்சியுடனும் கடின உழைப்புடனும் பல்வேறு நிறுவனங்களையும், இயக்கங்களையும் மேம்படுத்தினார். வலிமையான குரல்வளம், ஒட்டுமொத்தக் கூட்டத்தினரையும் தன்பால் ஈர்க்கும் வகையில் சிறந்த உரையாடல் திறன் ஆகியவற்றை அவர் கொண்டிருந்தார். அதேபோல், தம்முடன் பணியாற்றிய தொண்டர்கள் மீது அவர் கொண்டிருந்த அக்கறையும் போற்றுதலுக்குரியதாகும். அவருடன் பழகிய எவரும் அவரது எளிமையைக் கண்டு வியக்காமல் இருக்க முடியாது. சந்த் சமாஜத்துடன் அவர் ஆழமான நல்லுறவைக் கொண்டிருந்தார். நாடு முழுவதும் உள்ள சான்றோர்கள், ஞானிகளிடையே அவர் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். அவர்கள், அசோக் சிங்கால் ஜி–யின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்ததுடன், அவரது கருத்துகளை மிகுந்த மரியாதையுடன் கேட்டறிந்தனர்.

அசோக் சிங்கால் அவர்களின் தனிச்சிறப்புமிக்க ஆளுமையை வெளிப்படுத்திய இரண்டு நிகழ்வுகளை நான் நினைவுகூர்கிறேன். முதலாவது நிகழ்வு, சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரையின் நூற்றாண்டைக் குறிக்கும் வகையில், விஸ்வ இந்து பரிஷத் அமைப்பு 1993–ல் அமெரிக்காவில் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தபோது நடந்தது. வெளிநாட்டில்





இன்று அயோத்தியில் பிரமாண்டமான ராமர் கோயில் உருவாகியிருப்பதற்கு, அது சாத்தியமாக வேண்டும் என்பதற்காகத் தன்னலமின்றித் தங்களையே அர்ப்பணித்த அவரைப் போன்ற உன்னத தலைவர்கள் தான் முக்கிய காரணம்.

இத்தகைய மாநாட்டை நடத்த வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வை, அதற்கான திட்டமிடல் ஆகியவற்றுடன், பல்வேறு தரப்பினரையும் ஒருங்கிணைத்த விதம், அசோக் அவர்களின் சிறந்த நிர்வாகத் தலைமைப் பண்பை வெளிப்படுத்தின.

இரண்டாவது நிகழ்வு 2000–ம் ஆண்டில் நடந்தது. டிரினிடாட் மற்றும் டொபாகோ நாட்டின் போர்ட் ஆஃப் ஸ்பெயின் நகரில் உலக இந்து மாநாடு நடைபெற்றது. அதில் அவரது பங்கேற்பு, மற்ற பிரதிநிதிகளிடையே எவ்வாறு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது என்பதை நான் நேரில் கண்டேன். எனது உரைக்குப் பின், அவர் தெரிவித்த பாராட்டுகள் எனக்கு மிகவும் நெகிழ்ச்சியூட்டும் அனுபவமாக அமைந்தன. அவரது ஊக்கமளிக்கும் வார்த்தைகள், ஒவ்வொரு தொண்டருக்கும் எவ்வாறு உத்வேகம் அளித்தன என்பதை மீண்டும் ஒருமுறை நான் உணர்ந்தேன்.

அசோக் சிங்கால் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, ராம ஜென்மபூமி இயக்கத்தில் அவரது முக்கியப் பங்கை நினைவுகூராமல் இருக்க முடியாது. 1991–ம் ஆண்டு போட் கிளப் மைதானத்தில் நடைபெற்ற பேரணியில் அவர் ஆற்றிய உரையை யாரால்தான் மறக்க முடியும்? அல்லது அந்த இயக்கத்தின் உச்சக்கட்டத்தில் காயமடைந்து, அசோக் அவர்கள் ரத்தம் சிந்திய காட்சியை யாரால் மறக்க முடியும்? இன்று அயோத்தியில் பிரமாண்டமான ராமர் கோயில் உருவாகியிருப்பதற்கு, அது சாத்தியமாக வேண்டும் என்பதற்காகத் தன்னலமின்றித் தங்களையே அர்ப்பணித்த அசோக் அவர்கள் போன்ற உன்னத தலைவர்களின் பங்களிப்பும் ஒரு முக்கியக் காரணமாகும். அயோத்தியில் ராமர் கோயில் உருவாகியிருப்பதைக் பார்த்திருந்தால், அசோக் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பார்.

அசோக் சிங்கல் அவர்கள், சிறப்பான சிந்தனைத் தெளிவு கொண்டவராகத் திகழ்ந்தார்; நமது சமூகம் நல்லிணக்கத்துடன் இருக்க வேண்டும் என்றும், சகோதரத்துவ உணர்வை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கொண்டிருந்த நம்பிக்கையில் அந்தத் தெளிவு புலப்பட்டது. சமூக ஒற்றுமையையும் சமத்துவத்தையும் வலுப்படுத்த அவர் தொடர்ந்து பாடுபட்டார். சமூகத்தில் எந்தவித பாகுபாடும் இருக்கக் கூடாது என்றும், ஒவ்வொரு தனிநபரும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் உறுதியாக நம்பினார். அயோத்தியில் ராமர் கோயிலின் முதல் செங்கல், சமூகத்தின் விளிம்புநிலைப் பிரிவைச் சேர்ந்தவரும், பீகாரைச் சேர்ந்த விஸ்வ இந்து பரிஷத்தின் கடைநிலைத் தொண்டரான திரு காமேஷ்வர் சௌபால் அவர்களால் வைக்கப்பட வேண்டும் என்பது அவரது எண்ணமாக இருந்தது. காசியில் நடைபெற்ற தர்ம சன்சத் கூட்டத்தில், டோம் ராஜாவுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும் என்று அவர் முடிவு செய்ததுடன், பல்வேறு சமூக நலப் பணிகளிலும் அவருடன் இணைந்து செயல்பட்டார்.

தேசக் கட்டமைப்புக்கான பணிகளைக் கடந்து, கல்வி (குறிப்பாக வேதகாலக் கல்வி), இசை ஆகிய இரண்டு துறைகள் அசோக் சிங்கால் அவர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தன. வாரணாசி தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில், புனிதத் தலமான காசி, அசோக் சிங்கால் அவர்களின் வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகித்திருப்பது குறித்து பெருமிதம் கொள்கிறேன். அவர் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றதுடன், சிறந்த மாணவராகவும் திகழ்ந்தார். தொலைதூரக் கிராமங்களுக்கு, குறிப்பாக பழங்குடியின சமூகத்தினருக்கு அடிப்படைக் கல்வியைக் கொண்டு சேர்க்கும் நோக்கத்துடன் செயல்பட்ட ஏகல் வித்யாலயா முன்முயற்சியுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர் தீவிர புத்தக வாசிப்புப் பழக்கம் கொண்டவராகவும், பிறர் கூறுவதை உற்று கவனிப்பவராகவும் விளங்கினார். இளம் தொண்டர்கள் இயன்றவரை அதிகம் வாசிக்க வேண்டும் என்று அவர் எப்போதும் அறிவுறுத்திவந்தார்.

அசோக் அவர்களைப் பற்றி நன்கு அறிந்தவர்கள், அவர் எவ்வளவு இனிமையாகப் பாடுவார் என்பதை நன்கு அறிவர்! நாக்பூரில் நடைபெற்ற கூட்டங்களில் அவர் 'ஏகல் கீத்' பாடலைப் பாடி, அனைவரையும் மெய்மறக்கச் செய்ததை நான் நினைவுகூர்கிறேன். 2015–ம் ஆண்டில் அவரது 90–வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில், அவர் "என் அன்னை பூமியே..." என்ற பாடலைப் பாடிய காணொலி பெரும் வரவேற்பைப் பெற்றது.

அசோக் சிங்கல் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டை முன்னிட்டு, அவரது மகத்துவத்தையும், பங்களிப்புகளையும் மேலும் பல இளைஞர்கள் அறிந்துகொள்வதை நாம் உறுதி செய்வோம். நமது தேசம் குறித்தும், மக்களைப் பற்றியும் அவர் கண்ட கனவுகளை நனவாக்குவதற்கான தீர்மானங்களை மீண்டும் நினைவுகூர்ந்து உறுதியுடன் செயல்படுவோம்!

தேசிய ஒற்றுமை தின சிறப்பு பகுதி

அட்டைப்பக்கக் கட்டுரை

ஒரே பாரதம், உன்னத பாரதம்

கலாச்சார ஒருங்கிணைப்பு முதல் திட்டங்களின் ஒன்றிணைப்பு வரை



ஒற்றுமை என்ற வலிமையான அடித்தளத்தின் மீதுதான் நாடும், சமூகமும் செழிப்படைகின்றன. ஒற்றுமையாக இருக்கும் போது நாட்டின் ஒருமைப்பாடு பாதுகாப்பாக இருக்கிறது. வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கு ஒற்றுமை தான் முக்கியமான வழிகாட்டி. 2015 அக்டோபர் 31 அன்று சர்தார் படேலின் பிறந்தநாளில் புனித கெவாடியா பகுதியில் இருந்து 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' முன்முயற்சியைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். தொடக்கத்தில் மொழி, கலாச்சாரம், பாரம்பரியங்களின் பரிமாற்றத்திற்கு வழிவகை செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்த இந்த முன் முயற்சி, கடந்த 10 ஆண்டுகளில் ஆளுகையின் ஆன்மாவாகவே மாறியுள்ளது. சுமார் 550 சமஸ்தானங்களை ஒன்றிணைக்க சர்தார் படேலுக்கு உத்வேகம் அளித்த அதே தொலைநோக்குப் பார்வைதான், தற்போது வரிவிதிப்பு, உணவுப்பொருள் விநியோகம், ஓய்வூதியம், அரசியலமைப்பு, தேர்வுகள், ஆராய்ச்சி எனப் பல்வேறு துறைகளில் "ஒரே நாடு, ஒரே அமைப்புமுறை" சார்ந்த ஏராளமான முன்முயற்சிகளுக்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

தேசிய ஒற்றுமை தினத்தை முன்னிட்டு, வரும் அக்டோபர் 31 அன்று, சர்தார் படேலின் 150-வது பிறந்தநாள் விழாவின் இரண்டு ஆண்டு கால நாடு தழுவிய கொண்டாட்டம் தொடங்குகிறது. கலாச்சார ஒற்றுமையில் வேரூன்றிய 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற தாரக மந்திரம், கொள்கை வடிவமைப்பிலும், மக்களின் வாழ்க்கையை எளிமைப்படுத்துவதிலும் எவ்வாறு திருப்புமுனையாக அமைந்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டத்தின் பயனாளியான உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த விருந்தாவன் சவுராசியாவின் குடும்பத்தில் மொத்தம் ஐந்து உறுப்பினர்கள். குடும்பத்தினர் ஐவரின் பெயர்களும் குடும்ப அட்டையில் இடம்பெற்றிருப்பதாகவும், நியாய விலைக் கடையில் இருந்து அவர் மாதந்தோறும் அத்தியாவசியப் பொருட்களை பெறுகிறார். ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டத்தின் பயனாளி என்ற முறையில் நாட்டின் எந்த நியாய விலைக் கடையிலிருந்தும் அவர் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு அவர் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். மற்றொரு பயனாளியான கிருஷ்ணகுமார் மௌரியா, ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குடும்ப அட்டை இருப்பதாகவும், எவ்வித சிரமமுமின்றி ஒவ்வொரு மாதமும் அரிசி, கோதுமையைத் தாம் பெற்று வருவதாகவும் கூறுகிறார். 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டத்தால், நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் உணவு தானியங்களை அவர் பெற முடிகிறது. இந்த வசதியை ஏற்படுத்தித் தந்தமைக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு அவர் நன்றி தெரிவிக்கிறார். புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு, இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாகத் திகழ்வதுடன், அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் ஆதரவளிக்கிறது. தற்போது ஒவ்வொரு குடும்ப அட்டைதாரரும் நாட்டில் செயல்படும் எந்த ஒரு நியாய விலைக் கடையில் இருந்தும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுப் பயனடையலாம்.

மாநிலங்கள் பல; தேசம் ஒன்று
கொள்கைகள் பல; இலக்கு ஒன்று
பேச்சு வடிவங்கள் பல; குரல் ஒன்று
மொழிகள் பல; உணர்வு ஒன்று
வண்ணங்கள் பல; கொடி ஒன்று
சமூகங்கள் பல; இந்தியா ஒன்று
பழக்கவழக்கங்கள் பல; கலாச்சாரம் ஒன்று
வாழ்வாதாரங்கள் பல; உறுதிப்பாடு ஒன்று
பாதைகள் பல; இலக்கு ஒன்று
முகங்கள் பல; புன்னகை ஒன்று
ஒற்றுமையின் இந்தத் தாரக மந்திரத்தைப் பின்பற்றி, நாடு முன்னேற வேண்டும்.

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், மக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன், 2019-ல் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டத்தால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பின்னணியில் உள்ள சாராம்சம், கைப்பேசி எண்ணை மாற்றாமல் சேவை வழங்குநரை மாற்றிக்கொள்ளும் வசதியைப் போன்றதாகும். கைப்பேசி எண்ணை மாற்றாமலேயே சேவை வழங்கும் நிறுவனங்களை மாற்றிக் கொள்வதைப் போல, புதிய குடும்ப அட்டையின் தேவையின்றி, பயனாளிகள் நாட்டின் எந்த ஒரு நியாய விலைக் கடையில் இருந்தும் தங்களுக்கான பொருட்களைத் தற்போது பெற்றுக் கொள்ளலாம். அனைத்துக் குடும்ப அட்டைகளையும் ஆதார் எண்ணுடன் இணைத்து, நியாய விலைக் கடைகளில் மின்னணு விற்பனை முனைய இயந்திரங்களை நிறுவியதன் மூலம் இது சாத்தியமாகியுள்ளது. குறிப்பாக, வாழ்வாதாரத்திற்காக வேறு மாநிலங்களுக்கு இடம்பெயரும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது; அத்தகைய தொழிலாளர்கள், இனி தங்கள் சொந்த மாநிலத்தைப் போலவே எந்த ஒரு மாநிலத்திலும் தங்களுக்குரிய பொருட்களைப் பெறலாம்.

விருந்தாவன் சவுராசியா, கிருஷ்ண குமார் மௌரியா போன்ற லட்சக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், கைவினைக்கலைஞர்கள், சிறிய தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டம் கண்ணியத்தையும் நம்பிக்கையையும் அளித்துள்ளது. கடந்த சுமார் ஒரு தசாப்த காலமாக, இந்தியா பல்வேறு பகுதிகளாகச் சிதறிக் கிடந்த கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து, ஒரே அமைப்புமுறையாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதன் ஒரு சிறிய உதாரணமாக இது விளங்குகிறது.

வேற்றுமையில் ஒற்றுமையுடன்' வாழும் நமது திறன் தொடர்ச்சியான சோதனைக்கு உள்ளாகும்... எத்தகைய நிலையிலும் அதை நாம் வெல்ல வேண்டும்" என்று மகாத்மா காந்தி கூறுவார். கடந்த 12 ஆண்டுகளில், வேற்றுமையில் ஒற்றுமை என்ற உணர்வை நடைமுறையில் வெளிப்படுத்தும் வகையில் இந்தியா மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றி அடைந்துள்ளது. கொள்கைகள், உறுதியான' முடிவுகளின் வாயிலாக 'ஒரே பாரதம்' என்ற உணர்வை அரசு எப்போதுமே வலுப்படுத்தி வருகிறது. 'ஒரே நாடு, ஒரே அடையாளம்' (ஆதார்), 'ஒரே நாடு, ஒரே வரிமுறை' (ஜிஎஸ்டி), 'ஒரே நாடு, ஒரே மின் தொகுப்பு', ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை', ஒரே நாடு, ஒரே மருத்துவ காப்பீடு' போன்ற ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்புகள் நாட்டை ஒன்றிணைத்துள்ளன. இந்தியாவின் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தக்கூடிய 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முறையை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மதச்சார்பற்ற பொது சிவில் சட்டம் என்ற நோக்கத்துடன், 'ஒரே நாடு, ஒரே சிவில் சட்டம்' என்பதை நோக்கி இந்தியா முன்னேறி வருகிறது. செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து பிரதமர் நரேந்திர மோடியே இது குறித்த அறிவிப்பை வெளியிட்டார். சமூக ஒற்றுமை என்ற சர்தார் படேலின் தொலைநோக்குப் பார்வையின் எழுச்சியை மையமாகக் கொண்டு இத்திட்டம் அமைந்துள்ளது. பல்வேறு சமூகப் பிரிவுகளிடையே நிலவும்

ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவும், நாட்டின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தவும் இந்த முன்முயற்சி உதவும்.

மக்கள் நலனுக்கான கொள்கையாக உருவெடுத்த உணர்வு

ராஜதந்திரத்தாலும் உறுதிப்பாட்டினாலும் சுமார் 550 சமஸ்தானங்களை ஒருங்கிணைத்து, நவீன இந்தியாவை வடிவமைத்த சர்தார் படேலின் பிறந்தநாளை முன்னிட்டு 2015 அக்டோபர் 31 அன்று நடைபெற்ற தேசிய ஒற்றுமை தினக் கொண்டாட்டங்களின் போது, பிரதமர் நரேந்திர மோடி, 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற முன்முயற்சியைத் தொடங்கி வைத்தார். மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மத்திய அமைச்சகங்கள், கல்வி நிறுவனங்கள், பொதுமக்கள் இடையே மொழி, இலக்கியம், கலாச்சாரம், பாரம்பரியங்களை நேரடியாகப் பரிமாறிக்கொள்வதற்கு வழிவகுக்கும் தடையற்ற நடைமுறையை ஏற்படுத்தி, அதன் மூலம் நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் மேலும் வலுப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

> **எந்த ஒரு சமூகத்தின் வலிமையும், அதன் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. அதனால்தான், ஒரு வலிமையான தேசத்தை விரும்புவோர், இந்த ஒற்றுமை உணர்வைப் பாராட்டுவதுடன், அதற்காக உழைக்கிறார்கள். எனவே, நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் நம் அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும்.**
>
> –பிரதமர் திரு. நரேந்திர மோடி

கல்வி அமைச்சகத்தால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தில், கலாச்சார சுற்றுலாக்கள், மொழி சார்ந்த முகாம்கள், மாணவர்–ஆசிரியர் பரிமாற்ற நிகழ்ச்சிகள், திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாநிலமும் யூனியன் பிரதேசமும் மற்றொரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டது. இதன் மூலம், தமிழ்நாட்டு மாணவர் ஒருவர் பஞ்சாப் மாநிலத்தின் பாரம்பரிய அம்சங்கள் குறித்து அறிந்துகொள்ள முடியும்; அசாமைச் சேர்ந்த இளைஞரால் குஜராத்தின் கர்பா நடனத்தில் பங்கேற்று அந்தப் பகுதிக்கே உரிய தனித்துவமான உணர்வை அனுபவிக்க முடியும். இந்த முன்முயற்சியின் கீழ் கட்டுரைப் போட்டிகள், விநாடி வினா நிகழ்ச்சிகள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கலை விழாக்கள் முதலியவை நடத்தப்படுகின்றன. இதன் மூலம் "வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்துரு, பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ஒரு சொற்றொடர் என்ற நிலையிலிருந்து, மாணவர்களுக்கான நேரடி அனுபவமாக மாறுகிறது. காலப்போக்கில் இந்த முன்முயற்சியில் பல்வேறு இதர பரிமாணங்களும் சேர்க்கப்பட்டன. நாடு முழுவதும் உள்ளூர் கலாச்சாரத்தையும், கைவினைப்பொருட்களையும் ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட 'சுற்றுலாத் திருவிழா' போன்ற முயற்சிகள், பல்கலைக்கழகங்களில் நடத்தப்பட்ட "தாய்மொழிக்கு கவுரவம்" போன்ற நிகழ்ச்சிகள், அரசுத் திட்டங்களில் பல்வேறு மொழிகள் மற்றும் வட்டார மொழிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது ஆகிய அனைத்தும், ஒற்றுமை என்பது ஒரே மொழி அல்லது கலாச்சாரத்தைத் திணிப்பதன் மூலம் உருவாவதல்ல; மாறாக, வேறுபாடுகளை புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்வதன் மூலம் உருவாகிறது என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவையாகும். சர்தார் படேல் பல்வேறு சமஸ்தானங்களின் தனித்துவமான அடையாளங்களைப் பாதுகாத்தபடியே அவற்றை ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைத்ததைப் போல, வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநிறுத்துவதே இதன் நோக்கமாகும்.


எனினும், கலாச்சார சோதனை முயற்சியாகத் தொடங்கப்பட்ட இந்த முன்முயற்சி, விரிவான தத்துவமாக, படிப்படியாகப் பரிணமித்தது. இந்தியராக இருப்பது என்பது பகிரக்கூடிய அடையாளத்தைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது என்ற கருத்தின் அடிப்படையில் இது அமைந்திருந்தது. அவ்வாறு இருக்கும்போது, ஒரு குடிமகன் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த



இந்தியாவின் ஒற்றுமையின் நான்கு தூண்கள்

கலாச்சார ஒற்றுமை
பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியங்கள், புனிதத் தலங்கள், திருவிழாக்கள், யோகா, கலாச்சாரப் பரிமாற்றங்கள் முதலியவை நாட்டை ஒருங்கிணைக்கும் சக்திகளாகத் திகழ்கின்றன.

பாகுபாடற்ற வளர்ச்சி
வளர்ச்சியின் பலன்களும், அடிப்படை வசதிகளும் ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைப்பது உறுதி செய்யப்படும் அதே வேளையில், வறுமை, சமத்துவமின்மை, பாகுபாடு ஆகியவை, சமூக ஒற்றுமைக்கானத் தடைகளாகக் கருதப்படுகின்றன.



மொழியியல் ஒற்றுமை
இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும் வலிமைக்கும் ஆதாரமாகத் திகழும் நூற்றுக்கணக்கான மொழிகளையும், வட்டார மொழிகளையம் அங்கீகரித்து, அனைத்து இந்திய மொழிகளுக்கும் உரிய மரியாதை அளித்து அவற்றை ஊக்குவித்தல்.

போக்குவரத்து இணைப்புத்திறன் மூலம் இதயங்களை இணைத்தல்
சாலை, ரயில், நெடுஞ்சாலை, விமானப் போக்குவரத்துக் கட்டமைப்புகளுடன் டிஜிட்டல் உள்கட்டமைப்பின் மூலம் புவியியல் ரீதியான தொலைவைக் குறைத்து, மக்களிடையேயான தொடர்பையும் இணைப்பையும் மேம்படுத்துதல்.

மொழியைப் பேசுபவராக இருந்தாலும், எந்தப் பின்னணியைக் கொண்டவராக இருந்தாலும், அவருக்கான ஆளுகையின் அடிப்படை அமைப்புமுறைகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதே இதன் அடிப்படைக் கருத்தாகும். இதன் விளைவாக, சில ஆண்டுகளில் முக்கியக் கட்டமைப்பு சீர்திருத்தங்களாக இந்த மனப்பான்மை மாறத் தொடங்கியது.

வளர்ச்சி மற்றும் நம்பிக்கையின் ஒருங்கிணைப்பு: 'ஒரே பாரதத்தின்' அடித்தளம்

கடந்த 12 ஆண்டுகளில், சர்தார் படேலின் கனவுகளை நிறைவேற்றுகையில், மாநில எல்லைகளைக் கடந்து, நாட்டு மக்கள் அனைவரும் ஒரு பொதுவான தேசிய உணர்வால் ஒன்றிணைக்கப்படும் வகையிலான, ஒருங்கிணைந்தக் கட்டமைப்பிற்கு மத்திய அரசு அடித்தளமிட்டுள்ளது. இது, இந்தியாவிற்கும் சர்தார் படேலின் தலைசிறந்த பங்களிப்பிற்கும் நாட்டு மக்கள் தங்களின் செயல்பாட்டின் மூலம் செலுத்தும் மரியாதையாகும். சாத்தியமற்றதாகத் தோன்றும் பணிகளைக் கூட வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்பதை அவரது தொலைநோக்குப் பார்வை நமக்குக் கற்றுத் தந்துள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்றபோது, நாடு சிதைந்து விடும் என்று சிலர் கணித்தனர்; நூற்றுக்கணக்கான சமஸ்தானங்களை ஒருங்கிணைத்து, ஒரே இந்தியாவாக உருவாக்குவது சாத்தியம் இல்லை என்றே அவர்கள் கருதினர். இருந்த போதும் சர்தார் படேல் அதை சாதித்துக் காட்டினார். பிரதமர் நரேந்திர மோடியின் வார்த்தைகளில் கூற வேண்டுமானால், சர்தார் படேல் நடைமுறையில் யதார்த்தவாதியாகவும், தனது உறுதிப்பாட்டில் உண்மையாகவும், செயல்பாடுகளில் மனிதநேயத்துடனும், தனது இலக்கில் தேசிய உணர்வுடனும் திகழ்ந்ததால் இது சாத்தியமானது.

இன்று, மொழிகள் சார்ந்த விஷயங்களில் இந்தியாவின் அணுகுமுறையும், நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்தும் ஓர் உறுதியான இணைப்பாகத் திகழ்கிறது. புதிய தேசிய கல்விக் கொள்கை, கல்வியில் இந்திய மொழிகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. மராத்தி, பெங்காலி, அசாமிஸ், பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்தை மத்திய அரசு வழங்கியுள்ளது. மொழிகளைப் போலவே, நாடு முழுவதும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் போக்குவரத்து இணைப்பு நடவடிக்கைகளும் தேசத்தின் ஒற்றுமையை வலுப்படுத்துகின்றன. ரயில்வே, சாலைகள், நெடுஞ்சாலைகள், இணையவசதி ஆகியவற்றை உள்ளடக்கிய நவீன உள்கட்டமைப்பு வசதிகள், கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ள இடைவெளியை குறைக்கின்றன. கவ்மீரும் வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்களும் ரயில்கள் மூலம் இணைக்கப்பட்டிருக்கும் வேளையில், லட்சத்தீவுகளும், அந்தமான் நிக்கோபார் தீவுகளும் கடலுக்கடியிலான கேபிள்கள் மூலம் அதிவேக இணைய வசதியின் மூலம் இணைக்கப்பட்டிருக்கின்றன. மலைப்பிரதேசங்களில் வசிக்கும் மக்களை கைப்பேசி இணைப்பு சேவைகள் சென்றடையும் போது, வளர்ச்சிக்கான போட்டியில் பின்தங்கி விடக் கூடிய அச்சம் முற்றிலும்

தேசிய ஒற்றுமை தின சிறப்பு பகுதி

அட்டைப்பக்கக் கட்டுரை

ஒரே பாரதம், உன்னத பாரதம்

கலாச்சாரம் முதல் தேசிய ஒருமைப்பாடு வரை

தொடக்கம்: 2015 அக்டோபர் 31


- சர்தார் வல்லபாய் படேலின் 140–வது பிறந்தநாள் நூற்றாண்டில் தேசிய ஒற்றுமை தினத்தன்று அறிவிக்கப்பட்டது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இடையே மொழிகள், இலக்கியம், கலாச்சாரம், பாரம்பரியங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவது, இந்த முன்முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.
- கலாச்சார சுற்றுலாக்கள், மொழி சார்ந்த முகாம்கள், மாணவர்–ஆசிரியர் பரிமாற்ற நிகழ்ச்சிகள், திருவிழாக்கள், விநாடி வினா போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் போன்றவற்றை நடத்துவதற்காக, இரண்டு மாநிலங்கள் இணைக்கப்பட்டன. நாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்த மக்கள், மற்றொரு பகுதியைப் பற்றி வரைபடங்களில் மட்டுமின்றி, நேரடியாக அனுபவப்பூர்வமாக உணரும் வாய்ப்பை உருவாக்குவதற்காக இது போன்ற நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.
- காலப்போக்கில், இந்த முன்முயற்சி பரந்த ஒரு தத்துவமாகப் பரிணமித்தது. பன்முகத்தன்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில், ஒற்றுமையை வலுப்படுத்தும் தொலைநோக்குப் பார்வை, ஒருங்கிணைந்த அமைப்புமுறைகளுக்கான பாதையை வகுத்துத் தந்தது.
- மொழிசார் ஒற்றுமையை ஊக்குவிப்பதற்காக, இந்திய மொழிகளில் கல்வி கற்பிப்பதற்கும், மொழிகளை மேம்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
- சௌராஷ்டிரா – தமிழ் சங்கமம், காசி – தமிழ் சங்கமம் போன்ற கலாச்சார நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.
- சர்வதேச யோகா தினம் மூலம் கலாச்சார இணைப்பு வலுப்படுத்தப்படுகிறது.

காசி – தமிழ் சங்கமம்

2022–ல் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கிவைக்கப்பட்ட காசி – தமிழ் சங்கமம், கலாச்சார ஒற்றுமைக்கான பாலமாக அமைந்ததுடன், இதுவரை நடைபெற்றுள்ள நான்கு பதிப்புகளின் வாயிலாக இந்த நிகழ்ச்சி மேலும் வலுவடைந்துள்ளது. தமிழ்நாட்டிற்கும் காசிக்கும் இடையே உள்ள கலாச்சாரம், கல்வி சார்ந்த செயல்பாடுகளுக்கான தளமாக இது விரிவடைந்துள்ளது.

- காசி – தமிழ் சங்கமத்தின் முதல் பதிப்பு, ஒரு ஆழ்ந்த கலாச்சார அனுபவத்தை வழங்கியது. இரண்டாவது பதிப்பு, மக்கள் பங்கேற்பையும், கருப்பொருள் சார்ந்த செயல்பாடுகளிலும் கவனம் செலுத்தியது. மூன்றாவது பதிப்பு, அறிவுசார் நிகழ்வாக அமைந்திருந்தது. நான்காவது பதிப்பில் தமிழ் மொழிக் கற்றலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

சௌராஷ்டிரா – தமிழ் சங்கமம்: சௌராஷ்டிரா – தமிழ் சங்கமம் 2023–ல் நடைபெற்றது. தமிழ்நாட்டிற்கும் குஜராத்திற்கும் இடையேயான பகிரப்பட்ட கலாச்சார, பாரம்பரியங்களைக் கொண்டாடும் நிகழ்வாக அமைந்தது. பத்து நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில், சௌராஷ்டிர சமூகத்தைச் சேர்ந்த சுமார் 3000 தமிழர்கள் பங்கேற்றனர்.



இளைஞர் சங்கமம்: இளைஞர்கள் கல்வி சுற்றுலாவை மேற்கொள்ள வழிவகை செய்யும் யுவ சங்கமத்தின் 7–வது பதிப்பு தற்போது நடைபெற்று வருகிறது.

பாஷா சங்கம்: பல்வேறு இந்திய மொழிகளைப் பற்றி மக்களுக்கு அறிமுகப்படுத்துவதும், அவற்றைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதும் இந்தச் செயலியின் நோக்கமாகும்.

மறைந்து விடுகிறது. 'அனைவரும் ஒன்றிணைவோம், அனைவரும் உயர்வோம்' என்பது நல்லாட்சியின் தாரக மந்திரமாக உள்ளது. வளர்ச்சி மற்றும் நம்பிக்கையின் இந்த ஒருங்கிணைப்புதான், 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற உணர்வை ஊக்குவிக்கிறது.

நான்கு தூண்களின் மூலம் இந்தியாவின் ஒற்றுமையை நிலைநிறுத்துதல்

'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதற்கு ஒற்றுமையே அடித்தளமாகும். நாடு தொடர்ந்து கட்டமைத்து வரும் இந்த நான்கு முக்கிய தூண்கள் குறித்து பிரதமர்

ஒரே நாடு, ஒரே நேரம்

நேர நடைமுறைக்கு வெளிநாட்டு செயற்கைக்கோள் சார்ந்த ஆதாரங்களைச் சார்ந்திருப்பது குறைக்கப்படும்.

2026 ஆகஸ்ட் 27 அன்று, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை, சட்ட அளவியல் (இந்திய திட்ட நேரம்) விதிகள், 2026–ஐ அறிவித்தது. இந்த விதிகள், அரசிதழில் வெளியிடப்பட்ட 180 நாட்களுக்குப் பின் நடைமுறைக்கு வரும். சட்டம், நிர்வாகம், வணிகம், அதிகாரப்பூர்வ நோக்கங்களுக்காக, இந்திய திட்ட நேரம் (IST) நாடு முழுவதும் ஒரே சீராக பயன்படுத்தப்படும்.

- இந்த 'ஒரே நாடு, ஒரே நேரம்' முன்முயற்சி, இந்தியாவின் நேர நடைமுறையில் வெளிநாட்டு செயற்கைக்கோள் அடிப்படையிலான நேர ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்க உதவும்.
- ஒரு பொதுவான நேரக் குறிப்பு, வங்கி மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளில் துல்லியமான நேரப் பதிவை உறுதி செய்ய உதவும்.
- ரயில்வே, விமான நிலையங்கள், தொலைத்தொடர்பு அமைப்புமுறைகள், இணையம், மின் கட்டமைப்புகள் முழுவதும் மேம்பட்ட ஒருங்கிணைப்புக்கு இந்த முன்முயற்சி வழிவகை செய்யும்.
- அரசு மற்றும் சட்டரீதியான ஆவணங்கள், அவசர மற்றும் காலக்கெடு முக்கியத்துவம் வாய்ந்த பிற சேவைகள் தொடர்பான ஒருங்கிணைப்பும் மேம்படும்.



நரேந்திர மோடியே குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது தூண் கலாச்சார ஒற்றுமையாகும். மாறிவரும் அரசியல் சூழல்களையும் கடந்து, பல யுகங்களாக நாட்டைப் போற்றிப் பாதுகாப்பது, நமது கலாச்சாரம்தான். 12 ஜோதிர்லிங்கங்கள், 7 புனித நகரங்கள், சார்தாம் தலங்கள்,

> **காசி தமிழ் சங்கமம், சௌராஷ்டிர தமிழ் சங்கமம் ஆகிய முன்முயற்சிகள், இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமை உணர்வைக் கொண்டாடுவதுடன், பல்வேறு பாரம்பரியங்கள், மொழிகள், சமூகங்களை இணைத்து கலாச்சாரப் பரிமாற்றத்திற்கான தூடிப்பான தளங்களாகத் திகழ்கின்றன.**
>
> *–பிரதமர் திரு. நரேந்திர மோடி*

50–க்கும் மேற்பட்ட சக்தி பீடங்கள், புனிதப் பயண மரபுகள் முதலியவை, இந்தியாவை ஒரு துடிப்பான, விழிப்புணர்வுமிக்க நாடாகத் திகழச் செய்யும் முக்கிய சக்திகளாக உள்ளன. சௌராஷ்டிரா – தமிழ் சங்கமம், காசி – தமிழ் சங்கமம் போன்ற நிகழ்வுகள் மூலம் இந்த மரபு மேலும் வலுப்படுத்தப்படுகிறது. சர்வதேச யோகா தினத்தின் வாயிலாக, இந்தியாவின் மகத்தான யோகக் கலைக்கும் புதிய அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும், மக்களை இணைக்கும் ஒரு ஊடகமாக யோகா மாறி வருகிறது.

இரண்டாவது தூண், மொழியியல் ஒற்றுமையாகும். இந்தியாவின் நூற்றுக்கணக்கான மொழிகளும், பேச்சுவழக்கு மொழிகளும், நாட்டின் திறந்த மனப்பான்மையையும், படைப்பாற்றல் சிந்தனையையும் பிரதிபலிக்கின்றன. இங்கு எந்தவொரு சமூகமோ, அதிகார அமைப்போ, பிரிவினரோ மொழியை ஒருபோதும் ஆயுதமாகப் பயன்படுத்தியதில்லை; அதேபோல், ஒரு மொழியை மட்டும் திணிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால்தான் மொழி பன்முகத்தன்மையில் இந்தியா வளமிக்க நாடாக விளங்குகிறது. ஒரு இசைத் தொகுப்பின் தனித்துவமான ஸ்வரங்களைப் போல, இந்திய மொழிகள் நாட்டின் அடையாளத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளன. அதனால் தான், தற்போதைய அரசு, ஒவ்வொரு மொழியையும் தேசிய மொழியைப் போல பாவிக்கிறது. உலகின் தொன்மையான மொழியான தமிழ், அறிவுக் களஞ்சியமாகத் திகழும் சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகள், இந்தியாவின் பெருமைக்குரிய பாரம்பரியமாகத் திகழ்கின்றன. இன்று, இந்தியாவின் ஒவ்வொரு குழந்தையும் தாய்மொழியில் கல்வி கற்கும் வகையில், நாட்டின் அனைத்து மொழிகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், இந்தியர்கள் நாட்டின் பிற மொழிகளைப் பற்றியும் அவற்றின் வாயிலாகவும் அறிந்துகொள்ளும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம், மொழிகள் நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்தும் சக்திகளாகத் திகழ்கின்றன.

ஒற்றுமையின் மூன்றாவது தூண், பாகுபாடற்ற வளர்ச்சி. வறுமையும் பாகுபாடும் சமூகக் கட்டமைப்பின் மிகப்பெரிய பலவீனங்களாகும். இத்தகைய பலவீனங்களைத்தான்

‘ஒரே பாரதம், உன்னத பாரதம்’ திட்டத்தின் முக்கிய தூண்கள்



- **உணவுத் திருவிழாக்கள்:** பாரம்பரிய சமையல்: இந்த முன்முயற்சியின் கீழ் இணைக்கப்பட்ட மாநிலங்கள் இடையே சமையல் கலாச்சாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம், பங்கேற்பு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், தங்களது இணை மாநிலங்களின் பாரம்பரிய உணவு வகைகளைச் சுவைத்துப் பார்ப்பதுடன் அங்கு பிரபலமாக உள்ள உணவு வகைகள் குறித்தும் தெரிந்து கொள்ள முடிகிறது.
- **கலாச்சாரப் பரிமாற்றம்:** இந்தக் கருப்பொருளின் கீழ் இந்தியாவின் கலாச்சாரம், திருவிழாக்கள் பற்றி தெரிந்து கொள்வதற்கான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதன் வாயிலாக, பல்வேறு மாநிலங்களின் கலாச்சாரம் குறித்தும், பண்டிகைகள் எவ்வாறு கொண்டாடப்படுகின்றன என்பது குறித்தும் அறிந்து கொள்ளலாம். பாரம்பரிய உள்ளூர் சமையல் குறிப்புகளும், சமையல் முறைகளும் காட்சிப்படுத்தப்படுகின்றன.
- **இளைஞர் திருவிழாக்கள்:** மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் தேர்வு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள், இளைஞர் திருவிழாக்களை நடத்துகின்றன. தங்களது மற்றும் இணை மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் இந்தத் திருவிழாக்களில் பங்கேற்கின்றன.
- **‘ஒரே பாரதம், உன்னத பாரத’ மன்றங்கள்:** நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் இந்த முன்முயற்சி தொடர்பான பிரத்தியேக மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மன்றங்கள், இந்த இயக்கத்தின் செய்தியைக் கொண்டு செல்வதுடன், ஒவ்வொரு மாதமும் 'ஒரே பாரதம் உன்னத பாரத' தினத்தைக் கடைப்பிடிக்கிறது.
- **கல்விசார் பரிமாற்றம்:** கல்வி நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட தலைப்புகள் குறித்து கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றன. கருத்தரங்குகளும், இணையவழிக் கருத்தரங்குகளும் நடத்தப்படுவதுடன், இணை மாநிலங்களில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு நேரில் சென்று பார்வையிடும் வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன.
- **விளையாட்டு நிகழ்ச்சிகள்:** இந்த முன்முயற்சியின் கீழ், இளைஞர்களிடையே குழு உணர்வை வளர்க்கும் வகையில், குழு விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இதில் பாரம்பரிய விளையாட்டுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

படையெடுப்பாளர்கள் பயன்படுத்தி வந்தனர். அதனால்தான் வறுமையை ஒழிப்பதற்கான நீண்டகால திட்டம் ஒன்றை வகுக்க சர்தார் படேல் விரும்பினார். 1947–க்கு பத்தாண்டுகளுக்கு முன்பே இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்திருந்தால், அப்போதே உணவு தானியப் பற்றாக்குறை நெருக்கடியில் இருந்து நாடு விடுபட்டிருக்கும் என்று அவர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். சர்தார் படேலின் இத்தகைய உறுதிப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு இன்று முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கடந்த 12 ஆண்டுகளில், 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து

சுற்றுலாப் பரிமாற்றம்: சுற்றுலாத் துறையில் இணைந்து செயல்படும் மாநிலங்களில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் சிறப்பு அம்சங்கள் குறித்த அறிவையும், புரிதலையும் பெறுவதே இதன் நோக்கமாகும். நினைவுச்சின்னங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் குறித்த தகவல்களைப் பரப்புதல், சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல், ஹோம்ஸ்டே எனப்படும் உள்ளூரில் உள்ள இல்லங்களில் தங்கும் வசதியை ஊக்குவித்தல் ஆகியவை இதில் அடங்கும். புத்தகங்களின் மொழிபெயர்ப்பு: இத்தகைய மாநிலங்களின் இலக்கியம் உள்ளிட்ட பிற தகவல்களைப் புரிந்துகொள்ளும் வகையில், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த புத்தகங்கள், சுற்றுலாத் தகவல் கையேடுகள் மொழிபெயர்க்கப்படுகின்றன.

சுற்றுலாத் துறையில் இணைந்து செயல்படும் மாநிலத்தின் மொழியைக் கற்றல்: உள்ளூர் மக்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் வகையில், பல்வேறு மாநிலங்களின் மொழிகளை மக்கள் அறிந்து கொள்ளச் செய்வதே, 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' முன்முயற்சியின் நோக்கமாகும். மக்கள் தங்களது தாய்மொழியுடன், பிற இந்திய மொழிகளையும் கற்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

- ஒரே மாதிரியான பொருள்படும் பழமொழிகள் கற்பிக்கப்படுகின்றன. பாடல்கள் மொழிபெயர்க்கப்படுகின்றன. மேலும், அன்றாடப் பயன்பாட்டிற்கான வாக்கியம், 22 மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணங்கள் மற்றும் முகாம்கள்: இணை மாநிலங்களில் சுற்றுலாப் பயணங்கள் மற்றும் முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

திருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள்: திருவிழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, அவற்றில் பங்கேற்க இணை மாநிலங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.



தேசியத் திரைப்பட விருதுகள், இனி அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாக அமையும்

ஒற்றுமைக்கான ஒரு புதிய முன்முயற்சி

- **நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றம்:** முன்பு தில்லியில் மட்டுமே நடத்தப்பட்டு வந்த தேசியத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவை, நாட்டின் இதர முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குக் கொண்டு செல்லும் வகையில், ஒரு புதிய முன்முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.
- **குஜராத் மாநிலம் கெவாடியாவில் தொடக்கம்:** குஜராத் மாநிலம் கெவாடியாவில் 'ஒற்றுமை சிலை' அமைந்துள்ள வளாகத்தில், செப்டம்பர் 22, 2026 அன்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இந்த முன்முயற்சியைத் தொடங்கி வைத்தார்.
- **'ஒரே பாரதம் உன்னத பாரதத்தின்' செய்தி:** நவீன இந்தியாவின் சிற்பியான சர்தார் வல்லபாய் படேலின் சிலை அமைந்துள்ள இடத்தில், திரைப்படத் துறையின் சிறப்பையும், பன்முகத்தன்மையையும் கௌரவிப்பது, ஒரே பாரதம் உன்னத பாரதம் என்பதன் உணர்வை வெளிப்படுத்துவதாக அமைகிறது.
- **திரைப்பட விழாவை நடத்துவதற்கு மாநிலங்களுக்கு அழைப்பு:** திரைப்பட விழாவைத் தங்களது மாநிலத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் நடத்துவதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் மாநில அரசுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தில், அடுத்த ஆண்டு விருது வழங்கும் விழா நடைபெறும்.
- **சுற்றுலா மற்றும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துதல்:** கலை, கலாச்சாரம், சுற்றுலா ஆகியவற்றின் இந்த சங்கமம், பிராந்திய அளவிலான வளர்ச்சி, சுற்றுலாவை விரைவுபடுத்துவதுடன், நாட்டின் ஒற்றுமையை வலுவாகப் பிணைக்கவும் உதவிடும்.

மீட்கப்பட்டுள்ளனர். இன்று லட்சக்கணக்கான ஏழை மக்களுக்கு வீடுகள் வழங்கப்படுகின்றன; தூய்மையான குடிநீர் வீடுகளைச் சென்றடைகிறது; இலவச மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு குடிமகனுக்கும், கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதே, நாட்டின் தற்போதைய நோக்கமாகவும், தொலைநோக்குப் பார்வையாகவும் உள்ளது. பாகுபாடு மற்றும் ஊழலற்ற கொள்கைகள், தேசத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.


ஒற்றுமையின் நான்காவதுத் தூண், போக்குவரத்துக்கான

தேசிய ஒற்றுமை தின சிறப்பு பகுதி

அட்டைப்பக்கக் கட்டுரை

ஒரே நாடு, ஒரே வரி

பொருளாதார ஒருங்கிணைப்பின் புதிய சகாப்தம்



ஒரே நாடு, ஒரே வரி – ஜிஎஸ்டி

தொடக்கம்: ஜூலை 1, 2017



- சரக்கு மற்றும் சேவை வரி என்பது, 30 வகையான வரிகள் மற்றும் கூடுதல் தீர்வைகளை ஒரே வரி முறையின் கீழ் ஒருங்கிணைக்கப்படுவதைக் குறிப்பதாகும்.
- பல்வேறு மாநிலங்களின் வரி விதிப்பு முறைகளில் உள்ள சிக்கல்களைக் குறைப்பதும், இந்தியாவை ஒருங்கிணைந்த சந்தையாக உருவெடுக்கச் செய்வதும், இதன் நோக்கமாகும். வரி விதிக்கும் இந்த புதிய முறை, மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம், பிற வரிகள் குறித்த புரிதலை எளிதாக்கியுள்ளது.
- மத்திய, மாநில அரசுகளை ஒன்றிணைக்கும் 'ஜிஎஸ்டி கவுன்சில்', இந்த வரிக் கட்டமைப்பின் முக்கிய அங்கமாக உள்ளது.
- 'ஜிஎஸ்டி 2.0' சீர்திருத்த நடவடிக்கையின் கீழ், வரி விகிதங்கள், முக்கியமாக, 5% மற்றும் 18% ஆகிய இரு பிரிவுகளாக, மாற்றியமைக்கப்பட்டன.
- வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது:

2026 **1.65** கோடி

2017 **66.5** லட்சம்

ஒற்றுமைக்கான இணைப்பு: ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக, ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையை, ஜிஎஸ்டி நடைமுறை வலுப்படுத்தியுள்ளது. இது 17 வகையான வரிகள், 13 கூடுதல் தீர்வைகளை, பொதுக் கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைத்துள்ளது.

ஒரே நாடு, ஒரே வரி – ஜிஎஸ்டி

தொடக்கம்: சுங்கக் கட்டண வசூல் முறையை, மின்னணு முறையில் ஒருங்கிணைக்க, 2019-ல், இந்த புதிய நடைமுறை தொடங்கப்பட்டது. பிப்ரவரி 2021-ம் ஆண்டிற்குள், தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள அனைத்து சுங்கச்சாவடிகளும், ஃபாஸ்டேக் வசதி கொண்டவைகளாக மாற்றப்பட்டன.

- நாடு முழுவதும் நெடுஞ்சாலைகளில் பயணம் செய்வது, தடையற்றதாகவும், விரைவானதாகவும் மாறியுள்ளது. சுங்கச்சாவடிகளில், வாகனங்கள் வரிசையில் காத்திருக்கும் நேரம் குறைந்துள்ளதுடன், எரிபொருள் சேமிப்பும் சாத்தியமாகியுள்ளது.
- தனியார் கார்கள், ஜீப்புகள் மற்றும் வேன்களுக்கான வருடாந்திர பாஸ் வசதி ஆகஸ்ட் 15, 2025 அன்று, ரூ.3,075 கட்டணத்தில், அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வசதி, ஓராண்டு முழுவதும் அல்லது சுங்கச்சாவடிகள் வழியாக 200 முறை பயணிப்பதற்கு செல்லத்தக்கவையாகும்.
- ஃபாஸ்டேக் பயன்பாட்டில் நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்தும் வகையில், தற்போது, 'ஒன்-டேக்' முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது பயனர்கள் தங்களது வாகனத்தின் முன்பக்கத்தில் ஏற்கனவே ஒட்டப்பட்ட ஃபாஸ்டேக் வில்லையை மாற்றாமல், அதை வழங்கும் நிறுவனத்தை மட்டும் மாற்றிக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறது. இதன் மூலம், ஃபாஸ்டேக் பயனர்களுக்கு, அதிக வசதியும், தேர்வுகளும் கிடைக்கின்றன.

98%

-க்கும் அதிக பயன்பாட்டு விகிதம், 13 கோடி பயனர்களைக் கொண்டுள்ள ஃபாஸ்டேக், நாட்டில், மின்னணு சுங்கக் கட்டண வசூல் நடைமுறையை முழுமையாக மாற்றியமைத்துள்ளது.

ஒற்றுமைக்கான இணைப்பு: ஒரே ஃபாஸ்டேக் வில்லையைப் பயன்படுத்தி, நாடு முழுவதும், வாகனங்களுக்கான சுங்கக் கட்டணங்களைச் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. பல இடங்களில், வாகன நிறுத்துமிடக் கட்டணங்களைச் செலுத்தவும், இதனைப் பயன்படுத்த முடியும். வெவ்வேறு மாநிலங்களில், தனித்தனி சுங்கக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை நீக்கப்பட்டு, கட்டணம் செலுத்துவதில் சீரான நடைமுறை உறுதி செய்யப்பட்டுள்ளது.



இணைப்பு வசதிகள் மூலம், மக்களை இணைப்பதாகும். தற்போது, நாடு முழுவதும், தேசிய நெடுஞ்சாலைகளும், விரைவுச் சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. வந்தே பாரத், நமோ பாரத் போன்ற ரயில்கள், இந்திய ரயில்வேயில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. தற்போது சிறு நகரங்கள் கூட, விமான நிலையங்கள் மூலம் இணைக்கப்படுகின்றன. போக்குவரத்துக்கான இந்த நவீனக் கட்டமைப்பு, இந்தியா குறித்த உலகின் பார்வையை மாற்றியமைத்து வருகிறது. இது வடக்கு-தெற்கு, கிழக்கு-மேற்கு என நாடு முழுவதும் தொலைவுகளைக்

"ஒற்றுமையின்மை, புதிய நெருக்கடிகளை உருவாக்கும் வேளையில், அனைவரின் கூட்டு முயற்சி, தேசத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்கிறது. சுதந்திர இந்தியா உருவாக்கத்தின் போது, முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்த அனைவரது கூட்டு முயற்சி என்ற கோட்பாடு, சுதந்திரத்தின் இந்த பொற்காலத்தில், மிக அவசியத் தேவையாக உள்ளது."

– பிரதமர் திரு. நரேந்திர மோடி



குறைத்து, போக்குவரத்துக்கான இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்களுக்கிடையேயான உறவுகள், கலாச்சாரப் பரிமாற்றம் ஆகியவற்றின் புதிய சகாப்தம், நாட்டின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துகிறது. கடந்த 12 ஆண்டுகளில், இந்தியாவில் ஏற்பட்டுள்ள டிஜிட்டல் புரட்சி, இந்த ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

நாட்டின் வர்த்தகம் சார்ந்த மொழியை, ஒருமித்த குரலில் முழங்கிய தருணம்

சரக்கு மற்றும் சேவை வரி, இந்த மாற்றத்திற்கான மிக முக்கியத்துவம் வாய்ந்த, பரவலாக விவாதிக்கப்பட்ட சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. பல தசாப்தங்களாக, இந்தியா பல்வேறு வகையான வரிக் கட்டமைப்பு முறையைக் கொண்டிருந்தது. இதில், ஒவ்வொரு மாநிலமும், அதற்கென உருவாக்கப்பட்ட வரி நடைமுறைகளின் கீழ் செயல்பட்டு வந்தது. மாநில எல்லைகளைக் கடக்கும் லாரிகள், சோதனைச் சாவடிகளில், பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. அதேவேளையில், மாறுபட்ட வரி விகிதங்கள், அதிகாரத்துவ நடைமுறைச் சிக்கல்கள் ஆகியவை, அன்றாடம் எதிர்கொள்ளும் நிகழ்வுகளாக இருந்தன. ஒரு பொருளின் விலை, மாநில எல்லைகளைக் கடக்கும்போது மாறுபடும் நிலை இருந்தது. மேலும், வர்த்தகர்கள், ஒவ்வொரு மாநிலத்திற்கும், தனித்தனி கணக்குகளைப் பராமரிக்க வேண்டிய சிக்கலான சூழல் நிலவியது. சிறு கடைக்காரர்கள் முதல் பெரிய தொழிலதிபர்கள் வரை, அனைவரும் இந்தச் சிக்கலான வரிவிதிப்பு நடைமுறையால், மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 101–வது திருத்தத்தைத் தொடர்ந்து, 2017 ஜூலை 1 அன்று, இந்தச் சூழல் முழுமையாக மாறியது. கலால் வரி, சேவை வரி, மதிப்புக் கூட்டு வரி, உள்ளூர் நுழைவு வரி போன்ற பல்வேறு மறைமுக வரிகளை ஒருங்கிணைத்து, "ஒரே நாடு, ஒரே வரி" என்ற தொலைநோக்குப் பார்வையின் கீழ் செயல்படுத்தப்பட்ட ஜிஎஸ்டி, ஒரே சீரான வரி அமைப்பை உருவாக்கியது. தற்போது, ஒரே ஜிஎஸ்டி பதிவு எண், ஒருங்கிணைந்த ஆன்லைன் வரி தாக்கல் முறை, சீரான வரி நடைமுறை ஆகியவற்றின் மூலம், வணிகர்கள் நாட்டின் எந்தப் பகுதிக்கும் சரக்குகளைத் தடையின்றி கொண்டு செல்ல முடிகிறது. இது வணிகம் செய்வதை எளிதாக்கியதுடன், இந்தியாவை, உண்மையான ஒருங்கிணைந்த சந்தையாகவும் மாற்றியமைத்துள்ளது. வரி விகிதங்கள் உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து முடிவெடுப்பதற்காக, மத்திய, மாநில அரசுகளை ஒன்றிணைக்கும் ஜிஎஸ்டி கவுன்சில், இந்த மாற்றத்தை "கூட்டுறவுக் கூட்டாட்சி" என்பதன் எழுச்சிமிக்க உதாரணமாக மாற்றியுள்ளது. இங்கு, அனைத்து மாநிலங்களின் கோரிக்கைகளும் ஒரே இடத்தில் முன்வைக்கப்படுகின்றன. மேலும், வரி விகிதங்கள் முதல் வரி விலக்குகள் வரை, ஒவ்வொரு முடிவும், அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பரஸ்பர ஒருமித்த கருத்தின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன.

ஓய்வூதியம் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு: ஒரே சீரான நடைமுறையை உருவாக்குதல்

பல தசாப்தங்களாக, முன்னாள் ராணுவத்தினர், "ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம்" என்ற ஒரு கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். அதாவது, சமமான பதவி, சமமான பணிக்காலத்திற்கானச் சமமான ஓய்வூதியம் வழங்குவதாகும். முன்னதாக, ஒரே பதவியில் இருந்து ஓய்வு பெற்ற இரு ராணுவத்தினர், நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதில் ஒரே மாதிரியான பணிகளையும், அதே அளவிலான இடர்பாடுகளையும் எதிர்கொண்டிருந்த போதிலும், காலத்தால் முன்கூட்டியே ஓய்வு பெற்றவருக்கு, பிந்தைய காலத்தில் ஓய்வு

தேசிய ஒற்றுமை தின சிறப்பு பகுதி

அட்டைப்பக்கக் கட்டுரை

சமூக நலன்

ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு

ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை

தொடக்கம்: 2019

81 கோடிக்கும் அதிகமான பயனாளிகளுக்கு, இலவச உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

- புலம்பெயர் தொழிலாளர்கள், தங்களது சொந்த ஊருக்கு வெளியே பணிபுரியும் பயனாளிகள் உணவுப் பொருட்களைப் பெறும் வகையிலான நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.
- பயனாளிகள் இனி தங்கள் குடும்ப அட்டையைப் பயன்படுத்தி, நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும், தங்களுக்கான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- ஆதார் எண் இணைப்பு, நியாயவிலைக் கடைகளில் மின்னணு விற்பனை முனைய எந்திரங்களின் பயன்பாடு ஆகியவை, இந்த நடைமுறைக்கு உகந்த வசதியைச் சாத்தியமாக்கியுள்ளன.



ஒற்றுமைக்கான இணைப்பு:
நாட்டின் குடிமகன் எங்கு பணிபுரிந்தாலும், உணவுக்கான உரிமை, அவர் பணிபுரியும் இடத்திலேயே கிடைக்க வேண்டும்.

ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம்

தொடக்கம்: 2015



- இது ஒரே பதவி, ஒரே அளவிலான பணிக்காலத்தைக் கொண்ட முன்னாள் ராணுவத்தினருக்கு, சீரான ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையாகும்.
- வெவ்வேறு காலகட்டங்களில் ஓய்வு பெற்ற, ஒரே பதவி வகித்த வீரர்களுக்கு இடையேயான ஓய்வூதிய வேறுபாடுகளைக் களைவதே இதன் நோக்கமாகும்.
- 25 லட்சத்திற்கும் அதிகமான முன்னாள் ராணுவத்தினரும், அவர்களது குடும்பத்தினரும் பயனடைந்துள்ளனர்.

ஒற்றுமைக்கான இணைப்பு: ஓய்வூதிய நடைமுறையில், சமத்துவ உணர்வு, நாட்டிற்காகப் பணியாற்றும் வீரர்களுக்கு மரியாதை.

'ஒரே நாடு, ஒரே மருத்துவக் காப்பீடு'–க்கான வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை (ஆயுஷ்மான் பாரத்)

சமூகத்தில், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய, நலிவடைந்த நிலையில் உள்ள 40% குடும்பங்களுக்கு, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ சேவைகளில் சிகிச்சை பெறுவதற்காக, ஆண்டொன்றுக்கு, ஒரு குடும்பத்திற்குத் தலா ரூ.5 லட்சம் வரை இலவச மருத்துவக் காப்பீடு வழங்கப்படுகிறது.

- 2018 செப்டம்பரில் இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, 2026 ஆகஸ்ட் 12 வரை...
- பல்வேறு மாநிலங்களில் உள்ள மருத்துவமனைகளில்,

48.57 கோடிக்கும் அதிகமான ஆயுஷ்மான் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.



பெற்றவரைக் காட்டிலும் குறைவான ஓய்வூதியமே கிடைத்து வந்தது. இந்த முரண்பாடு, பல தசாப்தங்களாக முன்னாள் ராணுவத்தினரிடையே மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தி, பல்வேறு போராட்டங்களுக்கும் வழிவகுத்தது. 2014–ல், மத்தியில் புதிய அரசு பொறுப்பேற்றபோது, நீண்ட காலமாக நிலுவையில் இருந்த இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, 2015–ல் 'ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம்' என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஒரே பதவி, ஒரே அளவிலான பணிக்காலத்தைக் கொண்ட அனைத்து முன்னாள் ராணுவத்தினரும், அவர்கள் ஓய்வு பெற்ற


13 கோடிக்கும்

அதிகமான மருத்துவமனைச் சிகிச்சைக்கான சேர்க்கைகள், பயனாளிகளுக்கு ரூ 2 லட்சம் கோடிக்கும் அதிகமான சேமிப்பு.

29.05 லட்சத்திற்கும் அதிகமான நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த செலவுத் தொகை ரூ.8,800 கோடிக்கும் அதிகமாகும்.

- ஆயுஷ்மான் பாரத் மூத்த குடிமக்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 1.20 கோடி மூத்த குடிமக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒற்றுமைக்கான இணைப்பு:
ஆரோக்கியமான இந்தியா, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அடித்தளமாகும். இந்த இலக்கை எட்டும் வகையில், நாட்டில் அனைவருக்கும் சுகாதார சேவைகளின் பலன்கள் கிடைக்க வேண்டும்.



(22 செப்டம்பர் 2026 நிலவரப்படி)



ஒரே நாடு, ஒரே சுகாதாரப் பதிவு

தேசிய சுகாதார ஆணையத்தால் செயல்படுத்தப்படும் 'ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம்' திட்டத்தின் கீழ், 'ஒரு குடிமகன், ஒரு டிஜிட்டல் சுகாதாரப் பதிவு' என்ற இலக்கை எட்டும் வகையில், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் பாதுகாப்பான், காகிதப் பயன்பாடற்ற, ஒருங்கிணைந்த டிஜிட்டல் சுகாதாரப் பதிவுகளை உருவாக்குவதே, இத்திட்டத்தின் நோக்கமாகும்.

முக்கிய சாதனைகள் மற்றும் புள்ளிவிவரங்கள்...

ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குகளுக்கான அடையாள எண்களை உருவாக்குதல்: ஒவ்வொரு குடிமகனுக்கும் தனித்துவமான, 14 இலக்க அடையாள எண்ணை வழங்கும் வகையில், 96 கோடிக்கும் அதிகமான 'ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குகள்' உருவாக்கப்பட்டுள்ளன.

டிஜிட்டல் சுகாதாரப் பதிவிற்கான இணைப்பு: 110 கோடிக்கும் அதிகமான சுகாதாரப் பதிவுகள் (ஆய்வக அறிக்கைகள், மருத்துவரின் பரிந்துரைகள், தடுப்பூசி விவரங்கள், மருத்துவமனை சிகிச்சை குறித்த சுருக்கமான விவரக் குறிப்புகள் போன்றவை) ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கு எண்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஒப்புதல் அடிப்படையிலான பகிர்வு: இது நோயாளிகள் தங்களது கடந்தகால சுகாதாரப் பதிவுகளை, தங்களது சுய ஒப்புதலின் பேரில் நாட்டின் மருத்துவர்களுடன் பகிர்ந்துகொள்ள உதவுகிறது. இதனால், அவசியமற்ற மருத்துவ பரிசோதனைகள், காகிதம் சார்ந்த கோப்புகளை நிர்வகிக்கும் சிரமம் தவிர்க்கப்படுகிறது.

ஒற்றுமைக்கான இணைப்பு:
நாட்டின் எந்தப் பகுதியிலும், மருத்துவ சிகிச்சை பெற வழிவகுத்துள்ளது. ஒவ்வொரு நபரின் சுகாதாரப் பதிவுகள் டிஜிட்டல் முறையில் கிடைப்பதுடன், உடனுக்குடன் சுகாதாரத் தரவுகளை பெறுவதற்கும் வகை செய்கிறது.

ஆண்டைக் கருத்தில் கொள்ளாமல், சமவிகித ஓய்வூதியம் பெறுவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும். ஒரு சுபேதார், 1985-ம் ஆண்டில் அல்லது 2010-ம் ஆண்டில், பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும், அவர்களின் ஓய்வூதியம், தற்போது, ஒரே அளவுகோலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. ராணுவத்தினரின் குடும்பங்களிடையே நீண்டகால விவாதப் பொருளாக இருந்த, ஓய்வூதியம் குறித்த முரண்பாடுகளுக்கு, இறுதியாகத் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த புதிய ஒருங்கிணைந்த அமைப்பின் மூலம், இந்தியா ஒரு தெளிவான செய்தியை அளித்துள்ளது.

தேசிய ஒற்றுமை தின சிறப்பு பகுதி

அட்டைப்பக்கக் கட்டுரை

கல்வி – தேர்வுகள் – தேர்வு முறை

இளையோர் சக்தியின் ஒருங்கிணைந்த வலிமை





ஒரே நாடு, ஒரே தேர்வு (என்டிஏ)

தொடக்கம்: 2017–ல் தொடங்கப்பட்டது. 2026–ம் ஆண்டில், மாற்றங்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

- தேசிய தேர்வு முகமை அமைக்கப்பட்டதன் மூலம், தொழில்நுட்பம் சார்ந்த, ஒருங்கிணைந்த அமைப்பின் வாயிலாக, தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளை நடத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டது.
- மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான, தேசிய நுழைவுத் தேர்வாக, 'நீட்' நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டது.
- தேசிய தேர்வு முகாமையால் நடத்தப்படும் தேர்வுகள் உட்பட, அனைத்துப் பொதுத் தேர்வுகளையும், பாதுகாப்பாகவும், திறம்படவும் நடத்துவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்க, திரு நந்தன் நிலேகனி தலைமையில், ஒரு உயர்நிலைக் குழுவை, மத்திய அரசு அமைத்துள்ளது. இக்குழு, அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் ஆலோசனைகளை வரவேற்றுள்ளது.

வழிகாட்டுதல் கொள்கை:
ஒரு மாணவரின் வாய்ப்புகள், அவர் சார்ந்த மாநிலம் அல்லது கல்வி வாரியத்தின் வரையறைகளைக் கடந்து, தேசிய அளவிலான தேர்வுத் தளத்தின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஒரே நாடு, ஒரே தேர்வு முறை

ஆகஸ்ட் 2020–ல், மத்திய அமைச்சரவையால் ஒப்புதல் வழங்கப்பட்ட 'தேசியப் பணி நியமன முகமை' உருவாக்கம், "ஒரே நாடு, ஒரே பணி நியமனம்" என்ற தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ற, ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும்.

- தேசிய பணி நியமன முகமை உருவாக்கம்: மத்திய அரசுத் துறைகள், அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்களில், அரசிதழ் மூலம் அங்கீகரிக்கப்படாத/அதிகாரமில்லாத பணியிடங்களுக்கு (பிரிவு பி மற்றும் சி) முதற்கட்டத் தேர்வை நடத்துவதற்காக, ஒரு தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பாக தேசிய பணி நியமன முகமையை உருவாக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.
- முக்கியப் பணி நியமன முகமைகளின் ஒருங்கிணைப்பு: இதன் முதற்கட்டமாக, அரசுப் பணியாளர் தேர்வாணையம், ரயில்வே பணி நியமன வாரியங்கள் மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் ஆகிய மூன்று முக்கியத் தேர்வு முகமைகளின் முதற்கட்டத் தேர்வுகளுக்கு மாற்றாக, 'பொதுத் தகுதித் தேர்வு' முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒரே நாடு, ஒரே சந்தா முறை

அண்மையில் தொடங்கப்பட்ட முன்முயற்சி

- நாடு முழுவதிலும் உள்ள அரசு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், முன்னணி சர்வதேச ஆராய்ச்சி இதழ்களை 'தேசியச் சந்தா' முறையின் மூலம் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு அமைப்பு இது.
- இத்திட்டத்திற்காக, மூன்றாண்டுகளில், ரூ.6,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



வழிகாட்டுதல் கொள்கை:
அறிவுக்கான தேடல் என்பது, ஒரு நிறுவனத்தின் நிதி வசதி அல்லது புவிசார் இருப்பிடத்தைக் கொண்டு வரையறுக்கப்படக் கூடாது.

இனி, ராணுவ வீரர்களின் சேவை வெவ்வேறு அளவீடுகளால் மதிப்பீடு செய்யப்படாது.

ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே அரசியலமைப்பு

இந்த ஒருங்கிணைப்புப் பயணத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தியாயம் 2019–ம் ஆண்டு ஆகஸ்ட் 5–அன்று எழுதப்பட்டது. பல தசாப்தங்களாக, ஜம்மு கஷ்மீர் அரசியலமைப்புச் சட்டத்தின் 370–வது பிரிவின் கீழ், சிறப்பு அந்தஸ்து பெற்றிருந்தது. இதன் விளைவாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பல விதிகள், அங்கு முழுமையாகப் அமல்படுத்தப்படவில்லை. மேலும், நாட்டின்

அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகள்

நிர்வாக ஒருங்கிணைப்பு

ஒரே நாடு, ஒரே அரசியலமைப்பு

பிரிவு 370–லிருந்து விடுதலை

உறுதியான மாற்றம்: ஆகஸ்ட் 5, 2019



- ஜம்மு கஷ்மீர் தொடர்பான அரசியலமைப்புச் சட்ட நடைமுறைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து, 'ஒரே நாடு, ஒரே அரசியலமைப்பு' என்ற கோட்பாடு, புதிய பரிமாணத்தைப் பெற்றது.
- ஜம்மு கஷ்மீர், லடாக் ஆகியவை தனித்தனி யூனியன் பிரதேசங்களாக மறுசீரமைக்கப்பட்டன. இது மத்திய சட்டங்கள், நிர்வாக அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கான கட்டமைப்பை மாற்றியமைத்தது.

ஒற்றுமைக்கான இணைப்பு:

'ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே அரசியலமைப்பு' என்ற கனவு நனவாக்கப்பட்டுள்ளது. குடியுரிமைகள், அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகள் ஆகியவை தேசியக் கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டன.

ஒரே நாடு, ஒரே தேர்தல்

மசோதா: டிசம்பர் 2024

- மக்களவை, மாநிலச் சட்டப்பேரவைகளுக்கான தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவதற்கான செயல்முறை.
- முன்னாள் குடியரசுத்தலைவர் திரு ராம் நாத் கோவிந்த் தலைமையில் உயர்நிலைக் குழு, செப்டம்பர் 2023–ல் அமைக்கப்பட்டது.
- இந்தக் குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா, டிசம்பர் 2024–ல், மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போதைய நிலை:

இந்த மசோதா, இதுவரை சட்டமாகவில்லை. இந்த மசோதா, நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

ஒற்றுமைக்கான இணைப்பு:

நாடு முழுவதும், மக்களவை, மாநில சட்டப்பேரவைகளுக்கானத் தேர்தல்கள், ஒரே நேரத்தில் நடைபெறும் வகையில், தேர்தல் சுழற்சி முறையை ஒருங்கிணைப்பதற்கான முன்மொழிவாக இந்த மசோதா அமைந்துள்ளது. தேர்தல் செலவுகளைக் குறைப்பதையும், அடிக்கடி அமல்படுத்தப்படும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக, வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதையும், இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒரே நாடு, ஒரே பொது சிவில் சட்டம்

தற்போது நடைமுறையில் உள்ள சிவில் சட்டம், உண்மையில், பாகுபாடு காட்டும் வகையில் அமைந்திருப்பதாகப் பிரதமர் திரு நரேந்திர மோடி செங்கோட்டையிலிருந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

- அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கமும், உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடும், இத்தகைய நடவடிக்கைக்கு ஆதரவு அளிக்கின்றன. அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் கண்ட கனவை நனவாக்குவது, அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும்.
- இந்த முக்கியத்துவம் வாய்ந்த விவகாரம் குறித்து, நாடு தழுவிய அளவில், பரவலான விவாதம் நடைபெற வேண்டும். மதச்சார்பற்ற பொது சிவில் சட்டம் அத்தியாவசியத் தேவையாக உள்ளது.

ஒற்றுமைக்கான இணைப்பு:

மத அடிப்படையிலான பாகுபாடுகளிலிருந்து நாட்டை விடுவிக்கவும், சாமானிய மக்களின் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வைக் களைவதற்கும், மதச்சார்பற்ற பொது சிவில் சட்டம் உதவிடும். இதன் மூலம், ஒற்றுமை உணர்வும், ஒரே பாரதம், உன்னத பாரதம் எனும் கோட்பாடும் வலுப்பெறும். பின்னர், உச்ச நீதிமன்றம், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை உறுதி செய்தது.

பிற பகுதிகளில் உள்ள மக்களுக்குக் கிடைத்த சில உரிமைகளை, அங்கு வசிக்கும் மக்களால் பெற முடியவில்லை. அதுமட்டுமின்றி, நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இருந்த சொத்துரிமை, அங்கு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. நீண்டகாலமாக நீடித்திருந்த இந்தச் சவாலுக்குத் தீர்வு காணும் வகையில், நாடாளுமன்றம் 2019–ம் ஆண்டு ஆகஸ்ட் 5–அன்று, சிறப்பு அந்தஸ்து வழங்க வகை செய்யும் 370–வது பிரிவை ரத்து செய்தது. இதன் மூலம், 'ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே அரசியலமைப்பு' என்ற அடிப்படை உணர்வு

தேசிய ஒற்றுமை தின சிறப்பு பகுதி

அட்டைப்பக்கக் கட்டுரை

சாலை, ரயில் மற்றும் இணையதள இணைப்பு

தொலைவுகளைக் குறைப்பதிலிருந்து, தகவல் தொடர்பை எளிதாக்குவது வரை




ஒரே நாடு, ஒரே அடையாளம் – ஆதார்

- இது உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் அடையாளக் கட்டமைப்பாகும். இது கைவிரல் பதிவு மற்றும் மக்கள் தொகை சார்ந்த தரவுகளின் அடிப்படையில், டிஜிட்டல் அடையாளத்தை வழங்குகிறது.
- யுபிஐ, டிஜிலாக்கர், உமாங் செயலி மற்றும் மின்னணு கையொப்பம் உள்ளிட்ட பல சேவைகள், இந்த டிஜிட்டல் அடையாளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

144 கோடிக்கும் அதிகமான ஆதார் (ஒரே நாடு, ஒரே அடையாளம்) எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரே நாடு – ஒரே எரிவாயு தொகுப்பு

- 'ஒரே நாடு – ஒரே எரிவாயு தொகுப்பு' என்பதன் நோக்கம், ஒவ்வொரு வீட்டிற்கும், தடையற்ற சமையல் எரிவாயு இணைப்பையும், வாகனங்களுக்கு சிஎன்ஜி எரிபொருளையும் வழங்குவதாகும்.
- 2014–ம் ஆண்டிற்கு முந்தைய 27 ஆண்டுகளில், 15,000 கிலோமீட்டர் நீளமுள்ள எரிவாயு குழாய்கள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன.
- நாடு முழுவதும் 34,233 கிலோமீட்டர் நீளமுள்ள குழாய்களை அமைக்க பல்வேறு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில், ஜூன் 2025–க்குள், 25,429 கிலோமீட்டர் நீளமுள்ள எரிவாயு விநியோகக் குழாய்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.
- எரிவாயு கிடைப்பதும், அதற்கான இணைப்புகளும் அதிகரித்ததன் மூலம், பல மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மண்ணெண்ணெய் பயன்பாடு இல்லாத பகுதிகளாக மாறியுள்ளன.



ஒரே நாடு, ஒரே மின் தொகுப்புக் கட்டமைப்பு

- லே–லடாக் பகுதியை இணைத்ததன் மூலம், பிப்ரவரி 2019–ல் 'ஒரே நாடு, ஒரே மின் தொகுப்புக் கட்டமைப்பு, ஒரே அதிர்வெண்' என்ற இலக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இது ஒரே அதிர்வெண்ணில் இயங்கும், உலகின் மிகப்பெரிய மின் தொகுப்பாகும். 1.70 லட்சம் சர்க்யூட் கிலோமீட்டர் நீளமுள்ள மின் விநியோக வடங்கள் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளன.

1.12 லட்சம் மெகாவாட் மின் பரிமாற்றத் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், போதிய, தடையற்ற மின்சாரம் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், மின் பரிமாற்ற இழப்புகளும் குறைக்கப்பட்டுள்ளன.

ஒரே நாடு, ஒரே போக்குவரத்து பயண அட்டை

நாடு முழுவதும் உள்ள மெட்ரோ ரயில் சேவை அமைப்புகள், பேருந்துகள், வாடகை கார்கள், மோனோ ரயில்கள் மற்றும் அனைத்து புறநகர் ரயில் சேவைக்கான கட்டமைப்புக்களிலும் பயன்படுத்தும் வகையில், 'தேசிய பொது போக்குவரத்து பயண அட்டை' அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

- மார்ச் 2019–ல், போக்குவரத்து வசதிக்கான 'ஒரே நாடு, ஒரே போக்குவரத்து பயண அட்டை' திட்டத்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். தேசிய பொது போக்குவரத்து அட்டை யை அடிப்படையாகக் கொண்ட இந்த உள்நாட்டுத் தயாரிப்பான 'தானியங்கி கட்டண வசூல் அமைப்பு', இந்தியாவில் முதல் முறையாக கொண்டுவரப்பட்டுள்ள இத்தகைய பொது போக்குவரத்து கட்டண முறையாகும்.
- மெட்ரோ ரயில், பேருந்து, புறநகர் ரயில், சுங்கக் கட்டணம், வாகன நிறுத்துமிடம், சீர்மிகு நகரங்களுக்கான (Smart Cities) சேவைகள், சில்லறை விற்பனை உள்ளிட்ட அனைத்துச் சேவைகளிலும், கட்டணம் செலுத்துவதற்கு வாடிக்கையாளர்கள், இந்த ஒரே அட்டையைப் பயன்படுத்தலாம்.

மீட்டெடுக்கப்பட்டது.

" நாடு சுதந்திரம் அடைந்து எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு, "ஒரே நாடு, ஒரே அரசியலமைப்பு" என்ற நாட்டின் உறுதிமொழி நிறைவேறியுள்ளது. இது சர்தார் படேலுக்கு, ஒரு நன்றியுள்ள நாடு அளிக்கக்கூடிய மிகச்சிறந்த அஞ்சலியாகும். 70 ஆண்டுகளாக, பாபாசாகேப் அம்பேத்கரின் அரசியலமைப்புச் சட்டம், நாடு முழுவதும் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில், அங்கு முதன்முறையாக எந்தவிதப் பாகுபாடுமின்றி வாக்குகள் பதிவாகின. நாடு

போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு இணைப்புக்கான ரயில், சாலை, நெடுஞ்சாலை மற்றும் டிஜிட்டல் கட்டமைப்புகள்

சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள்

இந்தியாவின் சாலைக் கட்டமைப்பு

63.73 லட்சம் கி.மீ நீளம் கொண்டது. இது உலகின் இரண்டாவது மிகப்பெரிய சாலைக் கட்டமைப்பாகும்.

தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம்:

2013-14 — **91,287** கி.மீ

March 2026 — **1,46,572** கி.மீ

இது ஏறத்தாழ 61% கூடுதலாகும்.



ரயில் சேவைகள்

- 2026 ஆகஸ்டில், இந்திய ரயில்வேயில், 67.27 கோடி மக்கள் பயணம் செய்துள்ளனர்.
- இந்தியாவின் மொத்த அகல ரயில் பாதை கட்டமைப்பில், 99.6% மின்மயமாக்கப்பட்டுள்ளது.
- மும்பை – அகமதாபாத் அதிவேக ரயில் வழித்தடம், 508 கி.மீ நீளம் கொண்டது. இது மணிக்கு 350 கி.மீ வேகத்தில் ரயில்கள் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் முதல் உள்நாட்டு ஹைட்ரஜன் எரிபொருள் கலன் ரயில், 2026 ஜூலையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் விரைவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிஜிட்டல் இணைப்பு

- நாட்டில் இணையதளச் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 109.2 கோடியைக் கடந்துள்ளது. கம்பிவடம் இல்லாத (வயர்லெஸ்) இணையக் கட்டணம் ஒரு ஜிபி–க்கு ரூ.7.51 ஆகக் குறைந்துள்ளது.
- பாரத்நெட் திட்டம்: நாட்டின் கிராமப்புற பகுதிகளுக்கு இணைய சேவை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்தின் கீழ், 2.21 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராம ஊராட்சி அமைப்புகள், சேவை வழங்கத் தயார் நிலையில் உள்ளன.
- கண்ணாடி இழை (ஃபைபர்) மற்றும் 5ஜி கட்டமைப்புகள்: நாடு முழுவதும் 7 லட்சம் கிலோமீட்டர் நீளத்திற்கு, கண்ணாடி இழைநார் கேபிள்கள் பதிக்கப்பட்டுள்ளன. மேலும், 99.9% மாவட்டங்களில் 5ஜி சேவைகள் கிடைக்கின்றன.



ஒற்றுமைக்கான இணைப்பு: நாட்டின் எந்தப் பகுதியில் வசித்தாலும், நெடுஞ்சாலைகள், விரைவுச் சாலைகள் மற்றும் அதிவேக ரயில்கள் ஆகியவை தற்போது பல்வேறு பிராந்தியங்கள் மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையேயான பயணத்தை எளிதாக்குகின்றன. அதேபோல, டிஜிட்டல் இணைப்பு தூரத்தைக் குறைத்துள்ளது. கண்ணாடி இழைநார் (ஃபைபர்) கட்டமைப்பின் மூலம், கிராமங்கள் கூட தற்போது இணைக்கப்பட்டுள்ளன.

162 வந்தே பாரத், படுக்கை வசதி கொண்ட 2 வந்தே பாரத் மற்றும் 72 அம்ரித் பாரத் ரயில் சேவைகள் மூலம், போக்குவரத்து இணைப்பு வசதியும், பயண அனுபவமும் மேம்படுத்தப்பட்டுள்ளன.



சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகு, முதன்முறையாக, ஜம்மு கஷ்மீர் முதலமைச்சர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீது, பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதிமொழியும் ஏற்றுக்கொண்டார். தற்போது, கஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, நாட்டின் ஒவ்வொரு பகுதியும், ஒரே அரசியலமைப்புச் சட்டம், ஒரே சட்டக் கட்டமைப்பு மற்றும் குடிமக்களுக்கான சம உரிமைகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

மேலும், கடந்த 12 ஆண்டுகளில், நாட்டின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக இருந்த, பல பிரச்சனைகளுக்கு இந்தியா தீர்வு

தேசிய ஒற்றுமை தின சிறப்பு பகுதி

அட்டைப்பக்கக் கட்டுரை

விவசாயிகளுக்கு அதிகாரமளித்தல்

கிராமங்களுக்கும் விவசாயிகளுக்குமான ஒருங்கிணைந்த அமைப்பு

ஒரே தேசம், ஒரே உரம்

'பாரத்' பிராண்ட் மூலம் ஒரு புதிய தொடக்கம்

2022 அக்டோபர் 17 அன்று, பிரதமர் நரேந்திர மோடி, 'ஒரே தேசம், ஒரே உரம்' என்ற கருப்பொருளைக் கொண்ட பாரதிய மக்கள் உரத் திட்டத்தின் கீழ் பாரத் யூரியா பை திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

- இப்போது நாடு முழுவதும் விற்கப்படும் யூரியா, ஒரே பெயரையும், ஒரே தரநிலையையும், ஒரே பிராண்டையும் கொண்டதாக இருக்கிறது : அது 'பாரத்' என்பதாகும்.



ஒரே நாடு, ஒரே வேளாண் சந்தை

தேசிய மின்னணு வேளாண் சந்தை எனப்படும் இ–நாம், 2016–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. இ–நாம் மூலம், 'ஒரே தேசம், ஒரே வேளாண் சந்தை' என்ற தொலைநோக்குப் பார்வையை நோக்கி நாடு முன்னேறி வருகிறது.

- இ–நாம் இணையதளத்தில் 1.80 கோடிக்கும் அதிகமான விவசாயிகளும், 2.73 லட்சம் வணிகர்களும் பதிவு செய்துள்ளனர்.
- 23 மாநிலங்களிலும் 4 யூனியன் பிரதேசங்களிலும் உள்ள 1,656 மண்டிகள் (வேளாண் சந்தைகள்), இ–நாம் தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இ–நாம் தொடங்கப்பட்டதிலிருந்து 2026 மார்ச் மாதம் வரை

₹4.84

லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள, சுமார் 205 லட்சம் மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன.



கண்டுள்ளது. இந்தியாவிற்குத் தீங்கு விளைவித்தால், நாடு அவர்களை தண்டிக்காமல் இருக்காது என்பது பயங்கரவாத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு இன்று நன்கு தெரியும். வடகிழக்குப் பகுதியில், அமைதி மற்றும் செழிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல தடைகள் இருந்தன. இருப்பினும், பேச்சுவார்த்தை, வளர்ச்சி, நம்பிக்கை ஆகியவற்றின் மூலம் பிரிவினைவாத நெருப்பு அணைக்கப்பட்டது. அசாமில் நிலவி வந்த 50 ஆண்டுகாலப் பிரச்சனையை 'போடோ ஒப்பந்தம்' முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகு, ப்ரூ–ரியாங் ஒப்பந்தத்தின் மூலம் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். திரிபுராவின் தேசிய விடுதலை முன்னணியுடனான ஒப்பந்தம், நீண்டகால அமைதியின்மைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. மேலும், அசாம் – மேகாலயா இடையேயான எல்லைப் பிரச்சினை பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளது. 21–ம் நூற்றாண்டின் வரலாறு எழுதப்படும்போது, அதில் இந்தியா, இரண்டாவது, மூன்றாவது பத்தாண்டுகளில் நக்சலிசம் எனும் கொடிய நோயை எவ்வாறு வெற்றிகரமாக ஒழித்தது என்பது ஒரு பொன்னான அத்தியாயமாக இடம்பெறும். ஒரு காலத்தில், நேபாளத்தின் பசுபதியிலிருந்து இந்தியாவின் திருப்பதி வரை நக்சல் பாதிப்பு நிறைந்த பகுதியாக இருந்தது. நக்சலிசம் இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஒரு பெரும் சவாலாக உருவெடுத்திருந்தது. இன்று, இந்தியா நக்சலிசத்திலிருந்து விடுபட்டுள்ளது.

இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல்:

நாட்டின் எந்த மூலையில் ஒரு குழந்தை பிறந்தாலும், அது மருத்துவராகவோ அல்லது பொறியாளராகவோ ஆக வேண்டும் என்று கனவு காண்கிறது. இருப்பினும், சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, இந்தக் கனவை நனவாக்குவது என்பது, மாணவர் எந்த மாநில வாரியத்தில் படிக்கிறார் அல்லது எந்த மாநிலத்தின் நுழைவுத் தேர்வுப் படிவங்களை அவர்களால் நிரப்ப முடிகிறது போன்ற காரணிகளைப் பெரிதும் சார்ந்திருந்தது. மருத்துவ சேர்க்கைகளில் மாநில அளவிலான தேர்வுகளும், தனியார் தேர்வுகளும் ஏராளமாக இருந்தன. இதனால் மாணவர்கள் பல படிவங்களை நிரப்பவும், பல்வேறு நகரங்களுக்குப் பயணிக்கவும், வெவ்வேறு கட்டணங்களைச் செலுத்தவும், மாறுபட்ட மதிப்பீட்டுத் தரங்களைச் சமாளிக்கவும் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏழ்மையான பின்னணியைச் சேர்ந்த ஒரு

குடும்பத்திற்கு, இந்த முழு செயல்முறையும் ஒரு பெரிய மலைச் சிகரத்தில் ஏறுவதைப் போல அச்சமூட்டுவதாகத் தோன்றியது.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக, 2017-ம் ஆண்டில் தேசிய தேர்வு முகமை நிறுவப்பட்டது. அது நீட் தேர்வை மருத்துவக் கல்விக்கான ஒரே தேசிய நுழைவுத் தேர்வாக அறிமுகப்படுத்தியதுடன், ஜேஇஇ போன்ற பிற முக்கியத் தேர்வுகளை, மையப்படுத்தப்பட்ட, வெளிப்படையான, தொழில்நுட்பம் அடிப்படையிலான முறையில் நடத்துவதற்கும் வழிவகுத்தது. இப்போது, ஒரு மாணவர் பீகாரில் உள்ள ஒரு அரசுப் பள்ளியில் படித்தாலும், தில்லியில் உள்ள ஒரு புகழ்பெற்ற தனியார் பள்ளியில் படித்தாலும், அவர்களின் தகுதி ஒரே தேர்வு, ஒரே வினாத்தாள், ஒரே மதிப்பீட்டு அளவுகோல்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. இந்த ஒற்றுமை உணர்வானது, பள்ளிகள், கல்லூரிகளைத் தாண்டி ஆராய்ச்சி, புத்தாக்கத் துறைக்கும் விரிவடைந்துள்ளது. சர்வதேச ஆராய்ச்சி இதழ்களின் அதிக சந்தாக் கட்டணங்கள் காரணமாக, நாட்டின் பொதுக் கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்களில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் சமீபத்திய ஆராய்ச்சிகள் குறித்து தெரிந்துகொள்ள முடியாமல் பெரும்பாலும் அவதியடைந்தனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக ஒரே தேசம், ஒரே சந்தா திட்டம் உருவெடுத்துள்ளது.

இந்த மாற்றம் முற்றிலும் சவால்கள் அற்றதாக அமையவில்லை. எந்தவொரு பெரிய தேசிய மாற்றத்தைப் போலவே, இந்த அமைப்பைப் புதுப்பித்து மேம்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இருப்பினும், 'ஒரே நாடு, தேர்வு முறை' என்ற அடிப்படைக் கொள்கைகள், கல்வியில் சம வாய்ப்புகளுக்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளன.

முன்னோக்கிய பாதை: ஒரே நாடு, ஒரே தேர்தல்

இந்த ஒருங்கிணைப்புப் பயணம் இன்னும் முடிவடையவில்லை. ஒவ்வொரு ஆண்டும் நாடு முழுவதும் ஏதேனும் ஒரு மாநிலத்தில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. அதன் விளைவாக, நிர்வாக அமைப்பு தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்கிறது. மேலும் தேர்தல் நடத்தை விதிகள் கிட்டத்தட்ட நிரந்தரமாக அமலில் உள்ளன. இந்தக் காரணிகள் பெரும்பாலும் வளர்ச்சிப் பணிகளையும் கொள்கை முடிவுகள் எடுப்பதையும் பாதிக்கின்றன. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், தொடர்ச்சியான தேர்தல் சுழற்சியால் நிர்வாகத்தின் மீதும் வளங்களின் மீதும் ஏற்படும் சுமையைக் குறைப்பதற்காக, மக்களவைக்கும் அனைத்து மாநில சட்டப் பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்தும் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்ற கருத்தாக்கம் குறித்து நீண்டகாலமாக ஒரு விவாதம் நடைபெற்று வருகிறது.

அடிக்கடி தேர்தல்களை நடத்துவது அரசுக் கருவூலத்திற்குப் பெரும் சுமையை ஏற்படுத்துவதோடு, தேர்தல் பணிகளில் பாதுகாப்புப் படையினரையும், நிர்வாகப் பணியாளர்களையும் மீண்டும் மீண்டும் ஈடுபடுத்த வேண்டிய கட்டாயத்தையும் ஏற்படுத்துகிறது. இதனால், வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுகின்றன. ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவது, அரசு அமைப்புகள் பதவிக்காலம் முழுவதிலும் தொடர்ந்து செயல்பட்டு, நிலையான கொள்கைகளை வகுப்பதில் கவனம் செலுத்த வழிவகுக்கும்.

இது குறித்து ஆய்வு செய்ய, முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம் நாத் கோவிந்த் தலைமையில் செப்டம்பர் 2023-ல் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அது விரிவான ஆலோசனைகள், நிபுணர்களுடனான

> **இப்போது, ஒவ்வொரு இந்தியரும் 'ஒரே நாடு, ஒரே அரசியலமைப்பு' என்று கூறலாம். சர்தார் வல்லபாய் படேலின் 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். நாம் தேசத்தின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும். அத்துடன் இந்த செயல்முறை தொடர்ச்சியானதாக இருக்க வேண்டும்.**
>
> *–பிரதமர் திரு. நரேந்திர மோடி*

கலந்துரையாடல்கள் ஆகியவற்றுக்குப் பிறகு தனது பரிந்துரைகளை அரசிடம் சமர்ப்பித்தது. இந்தச் சூழலில், அரசியலமைப்பின் 129-வது திருத்த மசோதா, யூனியன் பிரதேச சட்டங்கள் திருத்த மசோதா ஆகியவை 2024 டிசம்பர் 17 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, இந்த மசோதாக்கள் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் பரிசீலனையில் உள்ளன. இது குறித்த விவாதங்கள் நாடாளுமன்றத்தில் இன்னும் நடைபெறவில்லை.

ஒற்றுமையின் நோக்கம் விரிவடைகிறது:

எந்தவொரு சமுதாயத்தின் வலிமையும் அதன் ஒற்றுமையில்தான் அடங்கியுள்ளது எனவும், தேசத்தின் நலனை விரும்புபவர்கள் ஒற்றுமையை உறுதியாகப் போற்றுகிறார்கள் எனவும் ஒரு சமஸ்கிருத நீதிமொழி கூறுகிறது. எனவே, வலிமையான தேசத்தை விரும்புவோர் ஒற்றுமை உணர்வைப் போற்றி, அதற்காகப் பாடுபடுகிறார்கள். நாட்டின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் நம் அனைவரது கூட்டுப் பொறுப்பாகும். வரலாற்றை எழுதுவதில் நேரத்தை வீணடிக்கக் கூடாது. மாறாக, வரலாற்றை உருவாக்கக் கடுமையாக உழைக்க வேண்டும் என்று சர்தார் படேல் நம்பினார்.

நிச்சயமாக இந்த மனநிலையில்தான் பிரதமர் நரேந்திர மோடி 2015-ல் ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற முன்முயற்சியைத் தொடங்கினார். அக்காலத்தில், இது சிலருக்கு வெறும் கலாச்சார நிகழ்ச்சியாகத் தோன்றியிருக்கலாம். இருப்பினும், கடந்த பத்து ஆண்டுகளில், இந்த உணர்வு வரி அமைப்புகள், உணவுப் பாதுகாப்பு, வீரர்களுக்கான மரியாதை, அரசியலமைப்புச் சமத்துவம், தேர்வு வாய்ப்புகள், கல்விக்கான அணுகல் என ஒவ்வொரு துறையிலும் ஆழமாகப் பொதிந்துள்ளது. நாட்டின் அனைத்துப் பகுதியில் வாழும் மக்களுக்கும், ஒரே மாதிரியான நிர்வாக அமைப்பை உறுதி செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, இந்தப் பயணம் தொடர்கிறது. ●



மத்திய அமைச்சரவை முடிவுகள்

ரபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு

பசுமை எரிசக்தி வழித்தடத்தின் மூன்றாம் கட்டத் திட்டத்திற்கு ஒப்புதல்

விவசாயிகளின் நலனுக்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் கிடைப்பதை விரிவுபடுத்துவதற்கும் மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது. நாடு இதை நோக்கிய இலக்கை அடையத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்தச் சூழலில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் 2026 செப்டம்பர் 30 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், ரபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கான முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், பசுமை எரிசக்தி வழித்தடத்தின் மூன்றாம் கட்டத் திட்டத்திற்கும், நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பைச் செயல்படுத்துவதற்கான ஒரு முன்மொழிவிற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் உதவும்...

முடிவு: 2027-28-ம் ஆண்டு சந்தைப்படுத்தல் பருவத்திற்காக அறிவிக்கப்பட்ட அனைத்து ரபி பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது.

தாக்கம்: குறைந்தபட்ச ஆதரவு விலையில், மிக அதிகபட்ச உயர்வாக குங்குமப்பூவின் விலை குவிண்டாலுக்கு ரூ.675 அதிகரித்தும், அதனைத் தொடர்ந்து கடுகு விதை (ராப்சீட்) மற்றும் கடுகு ஆகியவற்றின் விலை குவிண்டாலுக்கு ரூ.413 அதிகரித்தும் அறிவிக்கப்பட்டுள்ளது. மசூர் பருப்பு, பார்லி, கொண்டைக்கடலை, கோதுமை ஆகியவற்றின் விலை முறையே குவிண்டாலுக்கு ரூ.390, ரூ.136, ரூ.83, ரூ.25 அதிகரிக்கப்பட்டுள்ளது.

- 2014-15 மற்றும் 2025-26-க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் கோதுமை கொள்முதல் 3,715 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.
- 2014-15-ம் ஆண்டு முதல் 2025-26-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், ஆறு ரபி பயிர்களின் கொள்முதல் 3,921 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.

- 2014–15–ம் ஆண்டு முதல் 2025–26–ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், கோதுமை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.7.31 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.
- 2014–15–ம் ஆண்டு முதல் 2025–26–ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், ஆறு ரபி பயிர்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை 8.36 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்தது.

முடிவு: மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளுடன் (பிஇஎஸ்எஸ்) ஒருங்கிணைக்கப்பட்ட, மாநிலங்களுக்கு இடையேயான மின் பரிமாற்ற அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பசுமை எரிசக்தி வழித்தடத்தின் மூன்றாம் கட்டத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தாக்கம்: இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முன்முயற்சி, இந்தியாவின் மாநிலங்களுக்கு இடையேயான மின் பரிமாற்ற உள்கட்டமைப்பை வலுப்படுத்தி, மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் 135 ஜிகாவாட் வரையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை விநியோகித்து, ஒருங்கிணைக்க வழிவகுக்கும்.

- இத்திட்டத்தை 2032–33–ம் நிதியாண்டிற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த திட்டச் செலவு ரூ.1,86,405 கோடியாகும்.
- 2035–ம் ஆண்டுக்குள் புதைபடிவமற்ற மூலங்களில் இருந்து 900 ஜிகாவாட் மின்சக்தித் திறனை நிறுவும் இலக்கை அடைவதற்கு இது வழிவகுக்கும்.
- இத்திட்டம், கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதன் மூலம் நாட்டின் நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பிற்குப் பங்களிப்பதோடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த வளர்ச்சியையும் ஊக்குவிக்கும்.
- எரிசக்தி, உற்பத்தி, கட்டுமானத் துறைகளில் பெரிய அளவில் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.
- மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளின் உற்பத்தி, நிறுவல், உள்நாட்டு மின்சக்தி சேமிப்புத் துறைகளில் இது கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.
- இதனைச் செயல்படுத்தும் மாநிலங்களில் இத்திட்டமானது, செயல்பாடுகள், பராமரிப்பு, மின்கட்டமைப்பு மேலாண்மை போன்ற துறைகளில் நீண்டகாலத் திறன்சார் வேலைவாய்ப்பை உருவாக்கும்.

முடிவு: தில்லியில் நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பை (ITMS) செயல்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது



தாக்கம்: இத்திட்டம், அடையாளம் காணப்பட்ட 42 போக்குவரத்து வழித்தடங்களை உள்ளடக்கிய வகையில் செயல்படுத்தப்படும். வாகனங்கள் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்கப்படும்.

- இது 24 மாத காலத்திற்குள் மூன்று கட்டங்களாகச் செயல்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் செயல்பாடும், பராமரிப்பும் மேற்கொள்ளப்படும்.
- புதிய அமைப்பில், வாகனங்களின் எண்ணிக்கைக்கும் போக்குவரத்து நிலவரங்களுக்கும் ஏற்ப தங்களின் நேரத்தை சரிசெய்துகொள்ளும் திறன் கொண்ட சமிக்ஞைகள் இடம்பெறும்.
- செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் உதவியுடனான கண்காணிப்பு மூலம், திருடப்பட்ட வாகனங்கள், சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் ஆகியவற்றைக் கண்டறிவதை இது எளிதாக்கும்.

அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.





51,000–க்கும் அதிகமான பணி நியமனக் கடிதங்கள்

எதிர்காலத்திற்கு ஏற்ப இளைஞர்களை தயார்படுத்தும் மத்திய அரசு

தேசிய கல்விக் கொள்கை, திறன் இந்தியா இயக்கம், பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டம், தொழிற்பயிற்சி நிலையங்களை நவீனமயமாக்கும் பிரதமரின் சேது திட்டம் ஆகியவை இளைஞர்களை எதிர்காலத்திற்கு ஏற்ப தயார்படுத்துவதோடு, அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறவும் உதவுகின்றன. இந்தத் தொடர் முயற்சியின் ஒரு பகுதியாக, 2026 செப்டம்பர் 19 அன்று நடைபெற்ற ரோஸ்கார் மேளா எனப்படும் வேலைவாய்ப்புத் திருவிழாவில் 51,000–க்கும் அதிகமான இளைஞர்களுக்கு மத்திய அரசுப் பணியில் சேர்வதற்கான பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. 20–வது வேலைவாய்ப்புத் திருவிழாவில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, இளைஞர்கள் அடைந்துள்ள இந்த மைல்கல், அவர்களின் கடின உழைப்பின் பலன் மட்டுமல்லாது, அவர்களின் பெற்றோர், குடும்பத்தினரின் அர்ப்பணிப்பு, தியாகங்கள் ஆகியவற்றையும் குறிப்பதாகத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடையும்போதும், முதலீடுகள் அதிகரிக்கும்போதும், புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படும்போதும், புதிய துறைகள் விரிவடையும்போதும் இளைஞர்களுக்கான புதிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. இப்போது, இந்தியா வேகமாக வளர்ந்து வரும் ஒரு முக்கியப் பொருளாதாரமாக விளங்குகிறது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நாடு 7.8 சதவீத வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது. இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, தனியார் துறையிலும் வேலைவாய்ப்புகளை விரைவாக அதிகரிக்க மத்திய அரசு செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

இந்த தொலைநோக்குப் பார்வையை மனதில் கொண்டு, 'பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான வேலைவாய்ப்புத் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படுகிறது. இது சுமார் இரண்டு கோடி இளைஞர்களுக்கு முதல் முறையாகப் பணியில் சேரும் வாய்ப்பை வழங்கும்.

இது குறித்துப் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிடுகையில், இந்தத் திட்டத்தின் கீழ், முதல் முறையாக வேலைவாய்ப்பு பெறும் இளைஞர்களுக்கு அரசு ரூ.15,000 வரை

12.75 லட்சம் இளைஞர்கள் இதுவரை பணி நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர்

- இந்த வேலைவாய்ப்புத் திருவிழா நாடு முழுவதும் 45 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- புதிதாக நியமிக்கப்படும் ஊழியர்கள் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், துறைகளில் பணியாற்றவுள்ளனர்.
- இவற்றில் வருவாய்த் துறை, ரயில்வே அமைச்சகம், உள்துறை அமைச்சகம், சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம், நிதிச் சேவைகள் துறை, பாதுகாப்பு அமைச்சகம் போன்றவை அடங்கும்.
- 20–வது வேலைவாய்ப்புத் திருவிழா நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை இந்த வேலைவாய்ப்புத் திருவிழாக்கள் மூலம் மொத்தம் சுமார் 12.75 லட்சம் இளைஞர்கள் பல்வேறு துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

இப்போது, 1.7 கோடிக்கும் அதிகமான அரசு ஊழியர்கள் ஐஜிஓடி (iGOT) கர்மயோகி தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

2047–ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற மாபெரும் இலக்கை நோக்கி நாடு முன்னேறிக் கொண்டிருக்கும் வேளையில், நீங்கள் அனைவரும் மத்திய அரசுப் பணியில் இணைந்துள்ளீர்கள். அந்த இலக்கை நோக்கிய முயற்சியில் இளைஞர்களுக்கு ஒரு முக்கியப் பங்கு உண்டு."

–பிரதமர் திரு. நரேந்திர மோடி


இளைஞர்களை எதிர்காலத்திற்கு ஏற்ப தயார்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது

- தேசிய கல்விக் கொள்கை, திறன் இந்தியா இயக்கம், பிரதமரின் திறன் மேம்பாட்டுத் திட்டம், தொழிற்பயிற்சிகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.
- பிரதமரின் சேது திட்டத்தின் கீழ் ரூ.60,000 கோடி செலவில் 1,000 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ஐடிஐ) நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன.

ஊக்கத்தொகை வழங்கி வருகிறது என்று கூறினார். புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நிறுவனங்களுக்கும் ஊக்கத்தொகைகள் வழங்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார். சுருக்கமாகச் சொன்னால், நாடு முழுவதும் வேலைவாய்ப்பை அதிகரிக்க அரசு அனைத்து நிலைகளிலும் செயல்பட்டு வருகிறது என்று பிரதமர் கூறினார்.

வேலைவாய்ப்புத் திருவிழா, இளைஞர்களுக்கு அரசு வேலைகளை வழங்குகிறது

நடைபெற்ற தேதி	வழங்கப்பட்ட பணி நியமனக் கடிதங்கள்
22 அக்டோபர் 2022	75,000+
22 நவம்பர் 2022	71,000+
20 ஜனவரி 2023	71,000+
13 ஏப்ரல் 2023	71,000+
16 மே 2023	70,000+
13 ஜூன் 2023	70,000+
22 ஜூலை 2023	70,000+
28 ஆகஸ்ட் 2023	51,000+
26 செப்டம்பர் 2023	51,000+
28 அக்டோபர் 2023	51,000+
30 நவம்பர் 2023	51,000+
12 பிப்ரவரி 2024	1,00,000+
29 அக்டோபர் 2024	51,000+
23 டிசம்பர் 2024	71,000+
26 ஏப்ரல் 2025	51,000+
12 ஜூலை 2025	51,000+
24 அக்டோபர் 2025	51,000+
24 ஜனவரி 2026	61,000+
23 மே 2026	51,000+
19 செப்டம்பர் 2026	51,000+





செமிகண்டக்டர்

புத்தாக்கம், முதலீடு, வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கிறது

வலுவான பொருளாதாரத்தாலும், உலகளாவிய நம்பிக்கையின் உந்துதலாலும், இந்தியா உலகளாவிய உற்பத்தி மையமாக உருவெடுத்து வருகிறது. இந்தப் பயணத்தில் செமிகண்டக்டர் துறை ஒரு முக்கியப் பங்கை வகிக்கும். 2026 செப்டம்பர் 17 அன்று புதுதில்லியில் நடைபெற்ற 'செமிகான் இந்தியா 2026' நிகழ்வில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவின் செமிகண்டக்டர் துறை வேகமாக முன்னேறி வருவதாகக் குறிப்பிட்டார். நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் பங்களிக்குமாறு இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த திறமையான இளைஞர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

செமிகான் இந்தியா மாநாடு, 2022–ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மொஹாலி, சூரத் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு புதிய ஆலைகளில் வணிக உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் சிப்கள் தற்போது உலகளாவிய வாடிக்கையாளர்களைச் சென்றடைகின்றன. இது, சிப் வடிவமைப்பு, உபகரண உற்பத்தி, சோதனைத் திறன்கள் ஆகியவற்றை உள்நாட்டிலேயே குறைந்த கால அளவில் மேம்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளது. செமிகான் இந்தியா 2026 நிகழ்வில், பிரதமர் நரேந்திர மோடி இந்த விவரங்களைப் பகிர்ந்துகொண்டதோடு, 13.5 பில்லியன் டாலர் மதிப்பிலான செமிகண்டக்டர் இயக்கத்தின் இரண்டாம் கட்டத்தையும் அறிவித்தார். சர்வதேச நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், வடிவமைப்பு நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய ஒழுங்குமுறை சீர்திருத்தங்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.



கடந்த 15 நாட்களின் சாதனைகள்...


3,000 கிலோமீட்டர் நீளமுள்ள பிரத்யேக சரக்கு வழித்தடம் தொடங்கி வைக்கப்பட்டது.

- முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8% வளர்ச்சி அடைந்தது.
- பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் தில்லி பிரகடனத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்டன.
- மும்பையில் நடைபெற்ற உலகளாவிய நிதித் தொழில்நுட்ப விழாவில், நேரடித் தலையீடற்ற, மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு (ஏஜெண்டிக் ஏஐ), குவாண்டம் தொழில்நுட்பம் ஆகியவை மூலம் அனைவரையும் உள்ளடக்கிய நிதிச் சேவைகள் குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

பிரதமர் நரேந்திர மோடியின் உரையின் முக்கிய அம்சங்கள்...

செயற்கை நுண்ணறிவால் ஏற்பட்டுள்ள பெரிய அளவிலான தேவையின் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் **20%** வளர்ச்சி பெற்றுள்ளது.

- ஒரு லட்சம் பொறியியல் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்ற அரசின் லட்சியத் திட்டத்தில், 70,000 மாணவர்களுக்கு ஏற்கெனவே பயிற்சி நிறைவடைந்துள்ளது.
- பத்து ஆண்டுகளுக்கு முன்பு சுமார் 2 ஜிகாவாட்டாக இருந்த சூரிய மின்சக்தித் திறன், தற்போது 60 ஜிகாவாட்டைத் தாண்டியுள்ளது.





செமிகண்டக்டர் சூழலமைப்பை கட்டமைப்பதற்குப் பொதுவாகப் பல தசாப்தங்கள் ஆகும். இருப்பினும் இந்தியா இதில் குறுகிய காலத்திலேயே குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ளது. இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளிலும் நாடு ஒரே நேரத்தில் விரைந்து பணியாற்றியது...

- சிப் வடிவமைப்பும் உற்பத்தியும்
- உபகரணங்களும் மூலப்பொருள்கள் விநியோகமும்
- சிப் சோதனைத் திறன்கள்

“தற்போது செமிகண்டக்டர் துறையில் இந்தியாவில் ஆராய்ச்சி செய்து வரும் இளம் திறமையாளர்கள் இதில் தீவிரமாக செயலாற்ற முன்வர வேண்டும். வெளிநாடுகளில் ஆராய்ச்சி செய்பவர்களும், இந்தியாவில் மேம்பட்ட தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் இணைந்து செயல்பட வேண்டும்.

– பிரதமர் திரு. நரேந்திர மோடி

பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்ற நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



உடான் திட்டத்தின் 10 ஆண்டுகள்

போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்துதல்...

தற்சார்பு இந்தியாவை பலப்படுத்துதல்

"சாதாரண செருப்பு அணிந்த மக்கள் விமானங்களில் பயணிப்பதை நான் காண விரும்புகிறேன்" என்று, உடான் திட்டத்தின் கீழ் முதல் விமானச் சேவையின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கூறினார்... இப்போது, 1.68 கோடிக்கும் அதிகமான மக்கள் குறைந்த கட்டணத்தில் விமானச் சேவையின் பலன்களைப் பெற்றுள்ளனர் என்று உடான் திட்டப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இத்திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட, புதிய கட்டம் 2026 ஜூலை 4 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம் 120 புதிய இடங்களைச் சென்றடைவதுடன், 4 கோடி பயணிகளுக்குச் சேவையளிக்கும். அது மட்டுமல்லாமல், உள்நாட்டு விமானத் துறையையும், தற்சார்பு இந்தியா இயக்கத்தையும் வலுப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது...

சுதந்திரத்திற்குப் பிறகு முதல்முறையாக, தற்போதைய மத்திய அரசு, நாட்டிற்கான விமானப் போக்குவரத்துக் கொள்கையை வகுத்தது. அதனைத் தொடர்ந்து, 2016 அக்டோபர் 21 அன்று, உடான் எனப்படும் பிராந்திய விமானப் போக்குவரத்து இணைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் விமானம் 2017 ஏப்ரல் 27 அன்று இயக்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இந்தப் பத்து ஆண்டுகளில், உடான் திட்டம் 679 விமானப் போக்குவரத்து வழித்தடங்களைச் செயல்படுத்தி, 95 விமான நிலையங்கள், ஹெலிபோர்ட்கள், நீர்வழி விமான நிலையங்களை இணைத்துள்ளது. இதன் மூலம் பிராந்திய விமானப் போக்குவரத்து இணைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. குறைந்த கட்டணத்திலான விமான சேவைத் திட்டத்தின் மூலம், 2026 ஜூலை வரை 1.68 கோடிக்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளனர்.

“இனி வரும் ஆண்டுகளில், சிறிய நகரங்களில் 100 புதிய விமான நிலையங்களையும், 200 புதிய ஹெலிபேடுகளையும் அமைக்கும் திட்டங்களுடன், மத்திய அரசு ‘உடான்’ திட்டத்தை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டம் இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

– பிரதமர் திரு. நரேந்திர மோடி

இந்தியாவின் லட்சியங்களுக்கான ஒரு கொண்டாட்டம்

2016 அக்டோபர் 21 அன்று தொடங்கப்பட்ட 'உடான்' திட்டம், சாதாரண செருப்பு அணிந்த மக்கள் விமானங்களில் பயணிக்க வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை ஒரு தேசிய இயக்கமாக மாற்றியுள்ளது. இத்திட்டம் விமானப் பயணத்தை ஒவ்வொரு இந்தியருக்கும் எளிதானதாகவும், அணுகக்கூடியதாகவும் மாற்றுகிறது. தற்போது, உடான் என்பது வெறும் போக்குவரத்து இணைப்புத் திட்டம் மட்டுமின்றி, இது விவசாயிகளுக்கு, மாணவர்களுக்கு, கைவினைக்கலைஞர்களுக்கு, வணிகர்களுக்குப் புதிய வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அளிக்கும் இந்தியாவின் லட்சியங்களைக் கொண்டாடும் திட்டமாகும். இரண்டாம், மூன்றாம் நிலை நகரங்கள் முதல் தொலைதூரப் பகுதிகள் வரை, விமானப் போக்குவரத்தானது பொருளாதார வளர்ச்சி, சுற்றுலா, வேலைவாய்ப்பு, சமூக உள்ளடக்கம் ஆகியவற்றிற்கான சக்திவாய்ந்த உந்துசக்தியாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்துத்துறையின் மகுடத்தில் மற்றுமொரு சாதனை

இத்திட்டத்தின் வெற்றி, அனுபவங்களின் அடிப்படையில், மேம்படுத்தப்பட்ட திட்டத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான. மத்திய அமைச்சரவையால் 2026 மார்ச் 25 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது. 2026 ஏப்ரல் 4 அன்று தொடங்கப்பட்ட இந்த மேம்படுத்தப்பட்ட உடான் திட்டம், இரண்டாம், மூன்றாம் நிலை நகரங்கள், நாடு முழுவதும் உள்ள தொலைதூரப் பகுதிகளில் பிராந்திய விமானப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சிவில் விமானப் போக்குவரத்து வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக அடுத்த பத்து ஆண்டுகளில் சுமார் ரூ.29,000 கோடி செலவிடப்படும். இத்திட்டம், தற்போதுள்ள விமான சேவை இல்லாத ஓடுபாதைகளிலிருந்து, 100 விமான நிலையங்களை உருவாக்குவதையும், மலைப்பாங்கான, வடகிழக்கு மாநிலங்கள், முன்னேற விரும்பும் பகுதிகளில் 200 ஹெலிபோர்ட்களை உருவாக்குவதையும் உள்ளடக்கியுள்ளது. இது வளர்ச்சியடைந்த இந்தியா 2047 என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

இப்புதியக் கட்டம், கடைக்கோடி பகுதிகளிலும் இணைப்பை மேலும் வலுப்படுத்தி, அனைவருக்கும் விமான சேவை, அனைவருக்கும் வளர்ச்சி என்ற தொலைநோக்குப் பார்வை நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் நனவாவதை உறுதிசெய்யும்.

‘சிவில் விமானப் போக்குவரத்தின் பொருளாதார நன்மைகள்: செழுமையின் அலைகள்’ என்ற தலைப்பில் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் ஆய்வின் படி, விமானப் போக்குவரத்து இணைப்பிற்காகச் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும் 3.25 மடங்கு பொருளாதாரத் தாக்கத்தை உருவாக்குகிறது. அதேவேளையில், வேலைவாய்ப்பின் மீதான அதன் தாக்கம் 6.1 மடங்காக உள்ளது.

‘தற்சார்பு இந்தியா’ இயக்கத்தை வலுப்படுத்துதல்

உடான் திட்டத்தின் புதியக் கட்டத்தில், தொலைதூர, அணுகுவதற்கு கடினமான பகுதிகளுக்காக இரண்டு 'துருவ்' ஹெலிகாப்டர்களும், இரண்டு டோர்னியர்' விமானங்களும் கொள்முதல் செய்யப்படவுள்ளன. இது சிறிய ரக விமானங்களின் பற்றாக்குறையைப் போக்குவதுடன், 'தற்சார்பு இந்தியா' முன்முயற்சியின் கீழ் நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறைக்கு ஊக்கமளிக்கும். பிராந்திய வழித்தடங்களில் விமானச் சேவைகளின் நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்யவும், பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு, போக்குவரத்து செலவு இடைவெளிக்கான நிதியுதவியை ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிப்பதற்கான ஏற்பாடும் இத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது.





அன்னபூர்ணா திட்டத்தின் கீழ், நான்காவது தவணையாக ரூ.3,000 வீடுவிக்கப்பட்டது

வங்காளப் பெண்களுக்குப் புதிய வலிமை

இந்த ஆண்டு மே 4–ம் தேதி, மேற்கு வங்கம் ஒரு புதிய பாதையைத் தேர்ந்தெடுத்தது. மேலும், இந்தச் செயல்பாட்டில் மகளிர் முக்கியப் பங்காற்றினார்கள். மத்திய, மாநில அரசுகள் இணைந்து, மகளிரைத் தன்னிறைவு அடையச் செய்வதையும், அவர்களின் வாழ்க்கையை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துகின்றன.

நமது வீட்டில் உள்ள தாய்மார்களும், சகோதரிகளும் ஏராளமான பொறுப்புகளை வகிக்கிறார்கள். ஒரு பெண் தனது குடும்பத்தை அனைத்து வகையிலும் கவனித்துக்கொள்கிறார். அத்தியாவசியச் செலவுகள் குறித்த கவலை குறையும்போது, அவர்களின் தன்னம்பிக்கை மேலும் அதிகரிக்கிறது. இந்த நோக்கத்துடனேயே மேற்கு வங்க அரசு அன்னபூர்ணா திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ், செப்டம்பர் 17 அன்று 1.5 கோடி பெண்களின் வங்கிக் கணக்குகளில் தலா ரூ.3,000 செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இது வங்காளப் பெண்களின் தன்னம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க முயற்சி என்று குறிப்பிட்டார். இத்திட்டத்தின் பலன்களைப் பெறுவதில் தகுதியுள்ள ஒரு பெண் கூட விடுபட்டுவிடக் கூடாது என்பதை உறுதி செய்வதே அரசின் நோக்கமாகும். ஒரு தாயைப் பொறுத்தவரை, இத்தொகை அவரது குழந்தையின் கல்விச் செலவுகளுக்கு உதவும். ஒரு சகோதரியைப் பொறுத்தவரை, இது மருந்துகள் அல்லது அத்தியாவசிய வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதற்கான வகைசெய்யும். வங்காளப் பெண்கள் முடிவெடுக்கும் அதிகாரத்தையும், முன்னேறிச் செல்வதற்கான துணிச்சலையும் கொண்டிருக்க வேண்டும் என்பதே நமது தொலைநோக்குப் பார்வை என்று பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார். இதில் அன்னபூர்ணா திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது. வங்காளப் பெண்களின் வாழ்க்கையை எளிதாக்குவதும், அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்துவதுமே புதிய அரசின் முதன்மையான முன்னுரிமையாக இருந்தது. எனவே, குறைவானப் பேச்சு, அதிக நடவடிக்கைகள் – என்ற வழிகாட்டும் கொள்கையை நாம் பின்பற்றுகிறோம்.

முதன்மையான முன்னுரிமை: வாழ்க்கையின் ஒவ்வொரு சவாலுக்கும் தீர்வு காண்பது

கர்ப்பக் காலத்தில் ஊட்டச்சத்து	மகப்பேறு பெண்களுக்கான ஊட்டச்சத்து இயக்கம்
பெண் சிசுக்கொலையைத் தடுத்தல்	பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்
கழிப்பறை வசதி இல்லாததால் மாணவர்கள் பள்ளியை விட்டு நிற்பதைத் தடுத்தல்	பல லட்சம் கழிவறைகள் கட்டுதல்
நமது மகள்களின் தொடர் கல்வியை உறுதி செய்தல்	செல்வமகள் சேமிப்புத் திட்டம்
நமது மகள்களுக்கு சைனிக் பள்ளிகளில் சேரும் வாய்ப்பு	சைனிக் பள்ளிகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்
நமது மகள்கள் சொந்தத் தொழில் தொடங்க வழிவகை செய்தல்	முத்ரா திட்டத்தின் மூலம் பிணையமில்லா கடன்
தாய்மைக்கு பிறகும் பணியைத் தொடர்தல்	நீட்டிக்கப்பட்ட மகப்பேறு விடுப்பு
கிராமப்புறப் பெண்களுக்கு வருவாய் ஈட்டுவதற்கான புதிய வாய்ப்புகள்	சுய உதவிக் குழுக்கள்
சமையலறை புகையிலிருந்து விடுதலை	இலவச சமையல் எரிவாயு சிலிண்டர் திட்டம்
வீடுகளில் குடிநீர் வசதி	வீடுதோறும் குழாய் மூலம் குடிநீர் வசதி
இருளில் இருந்து விடுதலை	சௌபாக்யா திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்புகள்
நிதிச் சுமையின்றி சுகாதார சேவைகளைப் பெறுதல்	ஆயுஷ்மான் அட்டை
வங்கிச் சேவைகளைப் பெறுதல்	ஜன் தன் வங்கி கணக்கு
வீட்டுச் சொத்து மீதான உரிமைகள்	பிரதமரின் வீட்டு வசதித் திட்டம்





தாய்மார்கள், சகோதரர்கள் மற்றும் நமது மகள்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு காண்பதே முதல் முன்னுரிமையாக இருந்து வருகிறது. நாம் அனைவரும் இணைந்து ஒரு புதிய வங்காளத்தை உருவாக்குவோம். 'வளர்ச்சியடைந்த வங்காளம்' என்ற வலிமையுடன், 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற உறுதிமொழி மேலும் வலுப்பெறும்.

– பிரதமர் திரு. நரேந்திர மோடி

இந்த மனநிலையுடன்தான் அன்னபூர்ணா திட்டம் தொடங்கப்பட்டது. அரசு பதவியேற்ற சில நாட்களுக்குள்ளேயே இத்திட்டத்தின் பணிகள் தொடங்கின. அதிக எண்ணிக்கையிலான மகளிரின் வங்கிக் கணக்குகளுக்குப் பணம் சென்றடையத் தொடங்கியுள்ளது. தரகு பணம் இல்லை, இடைத்தரகர்கள் இல்லை. இப்போது, வங்காளத்தில் தரகு பணம் புழக்கத்தில் இல்லை!

50 லட்சம் புதிய ஏழைக் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த 12 ஆண்டுகளில், முந்தைய அரசுகளின் கீழ், பல்வேறு மத்திய அரசுத் திட்டங்கள் வங்காளத்திற்கு உரிய நேரத்தில் சென்றடையத் தவறியதால், ஏழைக் குடும்பங்களுக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டது. தற்போது, இந்தத் திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப்படுகின்றன.

வங்காளத்தில் புதிய அரசு அமைந்ததைத் தொடர்ந்து, பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 50 லட்சத்திற்கும் அதிகமான ஏழைக் குடும்பங்கள் நிரந்தர வீடுகளைப் பெறுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. பிரதமரின் விஸ்வகர்மா திட்டமும் இங்கு செயல்படுத்தப்பட்டுள்ளது. வங்காளத்தில் நிலுவையில் உள்ள ஒவ்வொரு திட்டமும், முடக்கப்பட்ட செயல்திட்டமும் தற்போது புதிய உத்வேகத்தைப் பெறுகின்றன.

பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

'சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத்தின் எதிர்காலம்' குறித்த சர்வதேச மாநாடு

வளர்ச்சியுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

வலுவான கொள்கைகள் மூலம் வளர்ச்சியும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையும் இணைந்து பயணிக்க முடியும் என்பதை இந்தியா நிரூபித்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில், சுற்றுச்சூழல் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் நாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் முன்னேற்றம் கண்டுள்ளது. இதன் விளைவாக, பாரிஸ் சிஓபி–21 ஒப்பந்தத்தின் இலக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு முன்னதாகவே பூர்த்தி செய்த ஒரே ஜி–20 நாடாக இந்தியா திகழ்கிறது. செப்டம்பர் 19 அன்று நடைபெற்ற 'சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத்தின் எதிர்காலம்' குறித்த சர்வதேச மாநாட்டின் தொடக்க விழாவில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவின் தனிநபர் கார்பன் வெளியேற்றம் தற்போது உலகளாவிய சராசரியில் பாதியளவிற்கும் குறைவாகவே உள்ளது என்று குறிப்பிட்டார்.

கார்பன் வெளியேற்றம் குறித்து உலகளவில் பரவலாக நிலவிவரும் தவறான புரிதலைச் சுட்டிக்காட்டிய பிரதமர் மோடி, வளரும் நாடுகள் பெரும்பாலும் நியாயமற்ற முறையில் குற்றம் சாட்டப்படுவதாகக் குறிப்பிட்டார். வளர்ந்த நாடுகள் இந்தியாவை விடத் தனிநபர் அடிப்படையில் ஆறு மடங்கு அதிக கார்பனை வெளியேற்றுவதால், அவர் இக்கருத்தை வலியுறுத்தினார். இந்தியா உலகையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் புதிய அளவுகோல்களை உருவாக்கி வருகிறது. புதைபடிவ எரிபொருள் அல்லாத எரிசக்தி, சூரிய சக்தித் திறன்களில் இந்தியா உலகளாவிய தரநிலைகளை நிறுவியுள்ளது.





தூய்மை எரிசக்தி

கடந்த **12** ஆண்டுகளில், சூரிய சக்தி உற்பத்தித் திறன் 2 ஜிகாவாட்டிலிருந்து 160 ஜிகாவாட்டிற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

3 3 மில்லியன் விவசாயிகள் குசும் திட்டத்தின்கீழ் சூரிய சக்தி பம்ப்செட்டுகளை பெற்றுள்ளனர்.

5 லட்சம் குடும்பங்கள் சூரிய சக்தி கட்டமைப்போடு இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பமும் ரூ.80,000 வரை நிதியுதவியைப் பெற்றுள்ளது.

'ஒரே நாடு – ஒரே மின் கட்டமைப்பு' திட்டத்தின் மூலம்

200

மில்லியன் டன்கள் அளவிலான கார்பன் வெளியேற்றம் குறைக்கப்பட்டுள்ளது.

- அரசின் முயற்சிகளால், புதைபடிவ எரிபொருள் சாராத எரிசக்தி உற்பத்தித் திறன் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.



தூய்மை மற்றும் நவீனப் போக்குவரத்து

- நாட்டின் முதல் ஹைட்ரஜன் ரயில், தூய்மையான, பசுமைப் போக்குவரத்துக்கான ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது.
- கடந்த ஆண்டில் மின்சார வாகனங்களின் விற்பனை 25 லட்சத்தை எட்டியது. 2014-க்கு முன்பு இந்த எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாகவே இருந்தது. இது 950 மடங்கு அதிகரிப்பைக் குறிக்கிறது.

தற்போது 20-க்கும் மேற்பட்ட நகரங்களில் மெட்ரோ ரயில் சேவைகள் உள்ளன. ஆனால், 2014-ல் இந்த வசதி ஐந்து நகரங்களில் மட்டுமே இருந்தது.





பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

கடந்த 12 ஆண்டுகளில், சுற்றுச்சூழல் தொடர்பான அனைத்துத் துறைகளிலும் இந்தியா அபரிமிதமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. நாம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீது முக்கிய கவனம் செலுத்தி வருகிறோம். சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இது பெரும் பங்காற்றியுள்ளது.

– பிரதமர் திரு. நரேந்திர மோடி

நீர் சேமிப்பு முதல் இயற்கை வேளாண்மை வரை

- நீர் சேமிப்பு: 'மழைநீர் சேகரிப்பு இயக்கத்தின்' கீழ் 70,000-க்கும் மேற்பட்ட 'அமிர்த நீர்நிலைகள்' மற்றும் 1.5 கோடி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- 'பிரதமரின் வேளாண் நீர்ப் பாசனத் திட்டம்', ஒவ்வொரு துளி நீரிலும் அதிக மகசூல் ஆகிய திட்டங்களின் மூலம் 2 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் கீழ், 12.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவை உள்ளடக்கிய 24,000 இயற்கை வேளாண் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- பருவநிலை மாற்றத்தைத் தாங்கி வளரக்கூடிய 3,000 பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- கடந்த 12 ஆண்டுகளில் அடர்ந்த வனப்பரப்பு 22%-க்கும் மேல் அதிகரித்துள்ளது.



குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 72-வது தேசிய திரைப்பட விருதுகளை வழங்கினார்

இந்திய சினிமாவின் எதிர்கால வாய்ப்புகள்

2024-ம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று, குஜராத்தின் கெவாடியாவில் உள்ள ஏக்தா நகரில் நடைபெற்ற விழாவில், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 72-வது தேசிய திரைப்பட விருதுகளை வழங்கினார். இந்தியத் திரையுலகிற்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்பிற்காக தாதாசாகேப் பால்கே விருதைப் பெற்ற மூத்த நடிகர் ஆனந்த் நாக் உள்ளிட்ட பல வெற்றியாளர்களுக்குக் குடியரசுத்தலைவர் விருதுகளை வழங்கினார். இந்தியத் திரைப்படங்கள் மக்களின் கனவுகள், மரபுகள், போராட்டங்கள், எதிர்கால வாய்ப்புகளைப் பிரதிபலிக்கின்றன என்று குறிப்பிட்ட குடியரசுத்தலைவர், விருது பெற்றவர்களின் திறமை, அர்ப்பணிப்பு, கடின உழைப்பு ஆகியவற்றைப் பாராட்டினார்.

உண்மையான நட்சத்திரம் ஒளியையே கொண்டுவருமேயன்றி, இருளை அல்ல குழந்தைகள், இளைஞர்களிடம் பிரபல கலைஞர்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை சுட்டிக்காட்டிய குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஒழுக்கமான வாழ்க்கை முறையின் நன்மைகளை ஊக்குவிக்குமாறும், ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்களை ஆதரிப்பதைத் தவிர்க்குமாறும் வெற்றிபெற்ற கலைஞர்களை வலியுறுத்தினார். ஒரு உண்மையான நட்சத்திரம் ஒளியையே கொண்டுவருமேயன்றி, இருளை அல்ல.

நாட்டின் சிறந்த சுற்றுலாத் தலங்களில் தேசிய திரைப்பட விருது விழா நடத்தப்படவுள்ளது

பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையால் ஈர்க்கப்பட்டு, நாட்டின் சிறந்த சுற்றுலாத் தலங்களில் தேசிய திரைப்பட விருது விழா நடத்தப்பட உள்ளதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

ஏக்தா நகரில் நடைபெற்ற திரைப்பட விருது வழங்கும் விழா (தில்லிக்கு வெளியே)

72-வது தேசிய திரைப்பட விருதுகள்:

34 மொழிகளில் 400 முழு நீளத் திரைப்படங்கள் மற்றும்

24 மொழிகளில் 161 குறும்படங்கள் இடம்பெற்றன.

- 22 திரைப்படப் பிரிவுகள், 23 குறும்படப் பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.
- கலாச்சார வெளிப்பாடு, உலகளாவிய கதைசொல்லலுக்கான ஒரு சக்திவாய்ந்த ஊடகமாக இந்தியத் திரையுலகம் தொடர்ந்து சிறந்து விளங்குகிறது.
- தில்லிக்கு வெளியே, ஏக்தா நகரில் தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவை நடத்துவது, சர்தார் வல்லபாய் படேலின் தொலைநோக்குப் பார்வை, தேசிய ஒற்றுமை மீதான அவரது அர்ப்பணிப்பு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க முன்முயற்சியாகும்.

72–வது தேசிய திரைப்பட விருதுகளின் முழுமையான பட்டியலைப் பார்க்க கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்






- 'பிரமயுகம்' திரைப்படத்திற்காக மம்மூட்டியும், 'சந்து சாம்பியன்' படத்திற்காக கார்த்திக் ஆர்யனும் சிறந்த நடிகருக்கான விருதை (முன்னணிக் கதாபாத்திரம்) வென்றனர்.

- 'ஆர்டிகிள் 370' திரைப்படத்திற்காக யாமி கௌதம் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றார்.
- 'ஆர்டிகிள் 370' திரைப்படம் சிறந்த திரைப்படத்திற்கான விருதை வென்றது.
- 'பகூஷ்க்' திரைப்படத்திற்காக சஞ்சய் மிஸ்ரா சிறந்த துணை நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- சிறந்த துணை நடிகைக்கான விருது, 'மகாராஜா' படத்திற்காக சச்சனா நமிதாஸ், 'மித்யா' படத்திற்காக ரூபாஷ்ரீ வரகடி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- 'கல்கி 2898 ஏடி' திரைப்படம், முழுமையான பொழுதுபோக்கிற்கான சிறந்த பிரபலமான திரைப்படமாக அறிவிக்கப்பட்டது.



- 'சுதந்திர போராட்ட வீரர் சாவர்க்கர்' திரைப்படத்திற்காக ரந்தீப் ஹூடா சிறந்த அறிமுக இயக்குநருக்கான விருதைப் பெற்றார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின்படி, தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நாட்டின் சிறந்த சுற்றுலாத் தலங்களில் நடத்தப்பட உள்ளது. பிரதமரின் இந்த தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, தேசிய அளவிலான நிகழ்வுகளை வழக்கமான இடங்களுக்கு அப்பால் கொண்டு சென்று, அவற்றை நாடு முழுவதும் உள்ள பல்வேறு இடங்களுடன் இணைப்பதே இதன் குறிக்கோளாகும். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேசிய திரைப்பட விருதுகள் விழாவை நடத்த, தங்கள் மாநிலங்களில் உள்ள சிறந்த சுற்றுலாத் தலங்களைப் பரிந்துரைக்குமாறு மாநில அரசுகளுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். இந்த முன்முயற்சியானது, தேசிய திரைப்பட விருதுகள் வெறும் அரங்குகளுக்குள் மட்டும் முடங்கிவிடாமல், சாமானிய மக்களையும் சென்றடைவதை உறுதி செய்கிறது.



தேசிய திரைப்பட விருது விழாவிற்கு குஜராத்தின் பிரமாண்ட வரவேற்பு

குஜராத்தில் நடைபெற்ற இந்த விழா, தேசிய திரைப்பட விருதுகளின் பயணத்தில் ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கத்தைக் குறித்தது. தில்லிக்கு வெளியே தேசிய திரைப்பட விருது விழாவை நடத்தும் புதிய நடைமுறையைத் தொடங்கியதற்காக, மத்திய தகவல், ஒலிபரப்பு அமைச்சகத்திற்கு குஜராத் ஆளுநர் ஆச்சார்ய தேவ்ரத் நன்றி தெரிவித்தார். சர்தார் வல்லபாய் படேலின் பாரம்பரியம் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடன் தொடர்புடைய இடமான கெவாடியாவின் 'ஏக்தா நகரில்' இத்தகைய மதிப்புமிக்க விருது வழங்கும் விழாவை நடத்துவது குஜராத்திற்குப் பெருமைக்குரிய அம்சம் என்று அவர் கூறினார்.



மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாரபுல்லா மூன்றாம் கட்ட உயர்மட்டச் சாலையைத் திறந்து வைத்தார்

தலைநகரின் போக்குவரத்து இணைப்பிற்குப் புதிய உத்வேகம்

2047–ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதை நோக்கி இந்தியா முன்னேறி வருகிறது. தலைநகர் தில்லியும் இந்த வளர்ச்சிப் பயணத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த தொலைநோக்குப் பார்வையுடன், மத்திய அரசு அங்கு உள்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா செப்டம்பர் 29 அன்று 'பாரபுல்லா மூன்றாம் கட்ட சாலை வழித்தடத்தை' தொடங்கி வைத்தார். இது தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்களுக்குத் தடையற்ற போக்குவரத்து இணைப்பை வழங்குவதோடு, எரிபொருளையும், நேரத்தையும் மிச்சப்படுத்தும்.

தில்லியின் வளர்ச்சி பயணத்தில் ஒரு முக்கியமான அத்தியாயம்

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா, ரூ.1,941 கோடிக்கும் அதிக மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து, அவற்றுக்கு அடிக்கல் நாட்டியதன் மூலம், நாட்டின் தலைநகரின் வளர்ச்சிப் பயணத்தில் மற்றொரு முக்கிய அத்தியாயம் தொடங்கியுள்ளது.

- நீண்ட காலமாக நிலுவையில் இருந்த பாரபுல்லா உயர்மட்டச் சாலையின் மூன்றாம் கட்டம் தற்போது தில்லி மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டுள்ளது.
- இது மயூர் விஹார் முதல் கட்ட சாலை முதல் எய்ம்ஸ் மருத்துவமனை வரை சிக்னல் இல்லாத பயணத்தை சாத்தியமாக்கும். இதனால் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, பயண நேரம் மிச்சமாகும். மேலும் லட்சக்கணக்கான மக்களின் அன்றாடப் பயணம் எளிதாகும்.
- முகர்பா சௌக் சுரங்கப்பாதையுடன், மோடி மில்–சாவித்ரி சினிமா மேம்பாலம் மற்றும் லோனி சுரங்கப்பாதை ஆகியவையும் தில்லியின் போக்குவரத்து இணைப்பை கணிசமாக மேம்படுத்தும்.
- நேரத்தை மிச்சப்படுத்தவும், பயணத்தை எளிதாக்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.



PMO India ✓
@PMOIndia

Free Trade Agreements हमारे युवाओं के लिए संभावनाओं के नए द्वार बना रहे हैं।


इस तरह के trade agreements से हमारे entrepreneurs के लिए नई partnerships के रास्ते खुलते हैं, नए markets के रास्ते खुलते हैं और हमारे युवाओं के लिए career में नई possibilities बनती हैं: PM @narendramodi



Rajnath Singh ✓ @rajnathsingh

तकनीक को आम नागरिक की ज़िंदगी का हिस्सा बनाकर जीवन आसान बनाना ही मोदी जी का विज़न है।

जनधन, UPI, आयुष्मान भारत और 5G नेटवर्क जैसी पहलों के माध्यम से प्रधानमंत्री @narendramodi जी ने भारत को 'विकसित भारत' के संकल्प की ओर तेज़ी से आगे बढ़ाया है। उनके इन प्रयासों ने जनविश्वास को और मज़बूत किया है।



Amit Shah ✓
@AmitShah

आने वाले दिनों में नशामुक्त मित्र देश के 10 लाख स्कूलों, कॉलेजों और शिक्षण संस्थानों तक पहुंचकर युवाओं को जागरूक करेंगे।



Nitin Gadkari ✓ @nitin_gadkari

Under the visionary leadership of Hon'ble Prime Minister Shri @narendramodi Ji, Ayushman Bharat has emerged as a transformative force in India's healthcare journey, ensuring that quality healthcare is more accessible, affordable and people-centric.



Nirmala Sitharaman Office ✓
@nsitharamanoffc

In 2014, Hon'ble PM Shri @narendramodi opened the doors of banking to everyone through PM Jan Dhan accounts, without requiring a minimum balance.

In 2015, PM MUDRA Yojana enabled small entrepreneurs to access loans without collateral.

By repaying their loans on time, beneficiaries have been able to access higher amounts, strengthen their credit profiles and build greater credibility with banks.

Today, many are growing their businesses and accessing regular banking facilities.



Kiren Rijiju ✓
@KirenRijiju

Union Cabinet, under the leadership of Hon'ble PM Shri @narendramodi ji, approves enhancement of the wage ceiling for mandatory #EPFO coverage from ₹15,000 to ₹25,000 per month.
The decision is expected to bring 51 lakh+ additional employees under mandatory EPFO coverage.

Modi pays tributes to legendary poet 'Dinkar'

Agencies
letters@hindustantimes.com

NEW DELHI: Prime Minister Narendra Modi on Wednesday paid tribute to the legendary Hindi poet, freedom fighter, and Padma Bhushan awardee Ramdhari Singh 'Dinkar' on his 118th birth anniversary, remembering him as a towering literary figure whose fiery works continue to instil national pride and self-respect in generations of Indians.

In a post on X, PM Modi noted that Dinkar's spirited compositions, rich with public awakening and patriotic fervour, will remain a timeless source of inspiration.

"On the birth anniversary of the National Poet Ramdhari Singh Dinkar, I offer my deepest respects to him a hundredfold. His fiery poems, brimming with the sentiments of public awakening and national pride, continue to infuse valour, vigour, and self-respect into the hearts of the countrymen even today. His works not only enrich literature but also inspire devotion to the motherland. His towering personality and timeless creations will guide generations of Indians for ages to come," he said. Born on September 23, 1908, Dinkar emerged as one of the most prominent modern Hindi poets in the country.

Other key leaders also paid homage to Dinkar's lasting contribution to Indian literature.

UP CM Yogi Adityanath said, "...With his impartial and fearless pen, he awakened national pride and infused new energy into the consciousness of every individual." Bihar CM Samrat Choudhary highlighted Dinkar's mastery of patriotic compositions, public consciousness, and 'veer ras' (heroic sentiment).

Ayushman Bharat@8: 60cr citizens covered

13Cr Availed Scheme, 48.5Cr Cards Created

TIMES NEWS NETWORK



PM Modi said Ayushman Bharat had transformed healthcare access for millions & described it as the world's largest health assurance scheme

New Delhi: Eight years after Ayushman Bharat was launched with the aim of making quality and affordable healthcare accessible to people, the scheme now covers more than 60 crore beneficiaries, with over 13 crore people having availed treatment worth over Rs 2 lakh crore through 39,000-plus empanelled public and private hospitals.

PM Narendra Modi, marking the eight-year milestone in a post on X, said Ayushman Bharat had transformed healthcare access for millions and described it as the world's largest health assurance scheme. He highlighted the Rs 5 lakh annual health cover available to more than 60 crore people and said the scheme had enabled savings on medical expenses, benefiting poor and middle-class families.

Modi also highlighted the expansion of healthcare closer to people through Ayushman Arogya Mandirs, which have recorded more than 500 crore visits. He said the journey represented govt's commitment to accessible and affordable healthcare.

Sharing the latest figures, health minister J P Nadda said more than 60 crore people were covered under the scheme and 48.5 crore-plus cards had been created. He highlighted the human impact of the numbers, pointing to families being protected from the burden of medical expenses, patients receiving timely treatment and households being able to face illness without the fear of financial hardship.

Even At Peak of Power, Keep Service Above Self: PM to Youth

Our Political Bureau

New Delhi: In an outreach to Gen Z workers of the BJP, Prime Minister Narendra Modi underlined on Thursday that serving the people should always be their highest priority, even at the peak of power. Addressing young party volunteers of the ongoing Seva Sankalp Yatra, he emphasised that they are going to lead India towards becoming a developed nation by 2047 and hence should put service before ambition.

In a virtual address to the youth taking part in the two simultaneous yatras — from Vadnagar to Varanasi and Varanasi to Vadnagar — that began on his birthday on September 17, the prime minister insisted that "Sewa parmo dharma" has been the core aim of the BJP since its inception.

We will spread the message of service through service, not through words alone, says Modi

"We will give the message of service through service, not through words alone. People should know from our conduct that whatever heights of power we attain, our attitude will be that of sewa (serving the people). We will never deviate from the path of service, whatever peaks of power we reach. We will move forward with 'sewa parmo dharma (service is the prime duty)'," Modi said.

Modi reaffirmed his party's resolve to focus on the country's development over politics and polls and said youth will play a major role in realising the resolve to make India a developed nation by 2047.

Nat'l film awards will now be at tourist destinations: Vaishnaw

TIMES NEWS NETWORK



President Droupadi Murmu presents the Best Actress in a Leading Role award to Yami Gautam for her performance in Article 370 during the 72nd National Film Awards, in Gujarat, Tuesday

New Delhi: On a day Ekta Nagar in Gujarat's Kevadia — where 'Statue of Unity' holds centrestage — became the space for the 72nd National Film Awards, information and broadcasting minister Ashwini Vaishnaw on Tuesday said govt plans to take these awards to some of the best tourism destinations across states in the future.

He urged all states to send in their proposals of best tourist destinations, and prepare and execute 360 degree development plans in those areas. "The proposal of whichever state is selected, the next national film awards will be held at that tourist destination," he said.

Reflecting on PM Narendra Modi's vision when G20 summit was organised in India in 2023, Vaishnaw said that at that time too programmes related to the summit were held across different states. The same is being done with the film awards and, therefore, these are being organised and will be taken to different tourist destinations in the future, he said.

Centre signs MoUs with 21 States for next phase of UDAN

Our Bureau
New Delhi

Over 20 State governments have shown interest in the Centre's modified UDAN scheme, which aims to accelerate airport construction, expand helicopter connectivity and promote domestic aviation manufacturing.

Accordingly, the Union Ministry of Civil Aviation has signed memoranda of understanding (MoUs) with 21 States for the next phase of UDAN.

Speaking after the signing on Tuesday, Civil Aviation Minister Ram Mohan Naidu said the Centre will adopt a challenge-based approach to prioritise airport projects that could be taken up quickly.

Rather than pursuing all projects simultaneously, the Ministry intends to select priority airports and those that are relatively easier to execute.

EXPEDITING PROJECTS

"Earlier, it could take up to three years to complete these airports. We want to reduce this," Naidu said.

"From the day the project starts, we want to finish it within 18 months and give the public the opportunity to travel from there."

According to the Minister, the next phase incorporates lessons from the earlier scheme and follows workshops with States.

Further, Naidu said the remaining States were finalising their MoU documents, and the Ministry expected to complete the signing process within two-three weeks.

The scheme also envisages 200 heliports across the country, with a focus on improving access in the North-East, and remote locations.

Furthermore, Naidu said the Centre will spend almost ₹30,000 crore over the next 10 years under the next phase of UDAN. Contributions from States and other stakeholders could take the overall scale to ₹60,000 crore, he added.

NEW ENTRANTS

The scheme could also encourage new airlines to enter the market and help existing operators strengthen their operations.

Additionally, Naidu said domestic aircraft manufacturing will be an important part of the next phase, in line with the government's Atmanirbharta and Make in India objectives.

Aviation manufacturing, he said, could generate highly skilled jobs and wider employment.

In addition, Naidu said UDAN had supported the development of more than 90 airports over the past decade and benefited nearly 1.54 crore passengers through affordable air travel.

He said the next phase will cater to need for airports closer to tier-II and -III cities. "It is important for us to plan for Viksit Bharat 2047, when India should ideally have more than 350 airports," he said.

Last month, *businessline* had reported that the Centre was inviting nominations from States and Union Territories to select the first batch of 50 airports for development under the modified UDAN scheme.

PM chairs ministers' meet with reforms agenda on the table

TRIBUNE NEWS SERVICE

NEW DELHI, SEPTEMBER 23

Prime Minister Narendra Modi on Wednesday chaired a meeting of the Council of Ministers to review the government's reform agenda as the second quarter of the current fiscal year nears its end.

The meeting, held at Sewa Teerth, focused on short-, medium- and long-term goals aimed at advancing the government's Viksit Bharat vision.

The Prime Minister reviewed past progress, assessed current challenges and discussed future priorities. He emphasised the need to unleash the next generation of reforms to



இந்திய தேசிய ராணுவ அரசின் 83–வது நிறுவன நாள்

21 அக்டோபர், 2026

இந்திய தேசிய ராணுவம்

முதலாவது இராணுவ நடவடிக்கைக்குத் தலைமை தாங்கியது

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், ஒவ்வொருவரின் மனதிலும் தேசபக்தி உணர்வைத் தட்டி எழுப்பிய இந்திய விடுதலைப் போராட்டத்தின் மாவீரர் ஆவார். இளைஞர்களை ஒன்றிணைத்து, இந்திய தேசிய ராணுவம் மூலம் அவர் தனது முதலாவது ராணுவ நடவடிக்கையைத் தொடங்கினார். அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் மூவண்ணக் கொடியை ஏற்றி, 1943–ல் சுதந்திர இந்தியாவை அவர் பிரகடனப்படுத்தினார். இந்திய தேசிய ராணுவத்தின் மூலம், நமது சொந்த ராணுவம் மற்றும் ராணுவ நடவடிக்கைகள் மூலமாகவே நாட்டு மக்கள் சுதந்திரத்தை அடைய முடியும் என்ற உறுதியான நம்பிக்கையை புரட்சியாளர்களின் மனங்களில் நேதாஜி விதைத்தார்.



- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 1943–ம் ஆண்டு அக்டோபர் 21–அன்று இந்திய தேசிய ராணுவ அரசை நிறுவினார். அந்த அரசு ஒரு வங்கி, நாணயம், அஞ்சல் தலைகளையும் அறிமுகப்படுத்தியது.
- 'ஜான்சி ராணி படைப்பிரிவை' நிறுவியதன் மூலம், ஆயுதப் படைகளில் பெண்களுக்குச் சமமான வாய்ப்புகள் கிடைப்பதற்கான அடித்தளத்தை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அமைத்தார்.



நேதாஜிக்கு ஒரே ஒரு குறிக்கோள், ஒரே ஒரு லட்சியம் மட்டுமே இருந்தது. அது இந்தியாவின் சுதந்திரம். அடிமைத்தளையிலிருந்து பாரத அன்னையை விடுவிப்பதே அவரின் இலக்காகும். இதுவே அவரது கொள்கையாகவும், அவரது செயல்பாட்டுக் களமாகவும் இருந்தது.

– பிரதமர் திரு. நரேந்திர மோடி

NEW INDIA SAMACHAR
FORTNIGHTLY

RNI NO.: DELENG/2020/78811 OCTOBER 16-31, 2026
RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: October 1, 2026 Pages: 46)

EDITOR IN CHIEF
Dhirendra Ojha
Principal Director General
Press Information Bureau, New Delhi

PUBLISHER:
Kanchan Prasad
Director General, on behalf of
Central Bureau Of Communication

PUBLISHED FROM:
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003